v.4 No.1
Jan 1931

3L
Rb73m211, N28
N31.4.1.
187150

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

10 JAN 1931

# சித்தாந்தம்

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு"


| | | |
|---|---|---|
| மலர் ச | பிரமோதூத ஆண்டு தைத் திங்கள்<br>1931 ஆம் ஜனவரி மீ | இதழ் க |


## தை பிறந்தால் வழி பிறக்கும்

[பத்திராசிரியர்]

"**தை** பிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழிகளுள் சிறந்த தொன்று. இப்பழமொழியைத் துருவி யாராய்ந்தால் பல துறைகளிலும் பல வகையான பொருள்கள் புலப்படும். பொதுவாக அமைதியற்றிருக்கும் நிலைமையை மாற்றி நல்ல வழியையும் தெளிவையும் காட்டுவது தை மாதப் பிறப்பு என்ற பொருள் இப்பழமொழியினுள் வெளிப்படையாகக் காணப்படும். பன்னிரண்டு மாதங் கொண்ட ஒரு மனுஷ்ய வருஷம் தேவர்களுக்கு ஒரு நாளென்றும், அதில் தை மாதம் முதல், ஆனியீறாகவுள்ள ஒரு பகுதி பகலென்றும், ஆடி முதல், மார்கழி யீறாகவுள்ள மறுபகுதி இரவென்றும் புராணம் கூறும். பொதுவாக நமது அநுபவத்தில் பார்க்கும்போது தை மாத முதல் ஆனி மாதம் வரையுள்ள காலம் சூரிய வெளிச்சம், நல்லகாற்று, சுத்தமான தண்ணீர் முதலியன மிகுதியாகவும் செம்மையாகவும் உள்ள காலமாகும். தமிழ் நாட்டினர் இக்காலத்தில் நெல் முதலிய தானியங்களை அறுத்து ஓராண்டுக்குத் தேவையான பண்டங்களைச் சேமித்து வைத்து இயற்கையோடியைந்த இன்பத்தை அநுபவித்துக் கடவுள் வணக்கம், திருமணம், தலயாத்திரை முதலியன செய்தற்குரிய ஓய்வைப் பெற்றுத் தங்கள் வாழ்க்கையைச் செவ்விதின் நடாத்துவர். ஆடி முதல், மார்கழி யீறாகவுள்ள காலத்தில் நம்மவர்கள் உழவு முதலிய தொழில்களில் ஈடுபட்டு மழை, மழைக் காற்று முதலியவைகளின் தொ[illegible]

வால் உடல் நலன் குறைவுற்று, ஓய்வு, மனவமைதி முதலியனவின்றிப் பொதுவாகக் குறைந்த வின்பத்தையே அநுபவிப்பார்கள். பிறப்பு இறப்புக் கணக்கைப் பார்க்கும்போது தைமுதல் ஆனி வரை இறப்பவர்கள் தொகையைவிட, ஆடிமுதல் மார்கழிவரை இறப்பவர்கள் தொகை இரண்டு அல்லது மூன்று பங்கு அதிகமாயிருக்கும். இங்கு தமிழ் நாட்டினர் என்றது தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களிலுள்ளோரைக் குறிப்பதேயன்றி ஆங்கில நாகரிகத்திற்றோய்ந்து கிடக்கும் நகரவாசிகளையல்ல.

இதற்கெல்லாம் காரணம் என்னவென்று ஆராய்ந்தால் சூரியன் நிலை மாறுவதே என்ற உண்மை புலனாகும். தற்போதைய வான சாத்திரத்தின் படி கணக்கிட்டால் டிசம்பர்௴ கடைசி முதல் ஜூன்௴ கடைசிவரை சூரியன் தெற்கேயிருந்து வடக்கே செல்லுவதாகவும், ஜூன்௴ கடைசிமுதல் டிசம்பர்௴ கடைசிவரை வடக்கேயிருந்து தெற்கே செல்வதாகவும், மார்ச்சு௴ 21௳, செப்டம்பர்௴ 23௳ ஆகிய இரண்டு நாட்களிலும் இரவும் பகலும் சமமாயிருக்கும் நிலையிலிருப்பதாகவும் (Equinoxes)காண்கிறோம். மேலும் டிசம்பர்௴ கடைசி முதல் ஜூன்௴ கடைசி வரையுள்ள ஆறு மாதங்களில் பொதுவாகபூமிக்குஅருகில்சூரியன்வருவதாகவும் மற்றைய ஆறுமாதங்களில் பொதுவாகச் சற்று விலகிப் போவதாகவும் நவீனவான சாத்திரம் கூறுகின்றது. டிசம்பர் கடைசி, ஜூன் கடைசி என்ற காலவரையறைகட்கு Solsticesஎன்று பெயர். பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் இந்த இரண்டும் சரியாக தை௴ ௧ தேதி ஆடி௴ ௧ தேதியிலேயே வந்து கொண்டிருந்தன. ஆனால் மேஷ முதற்புள்ளி (First Point of Aries) என்ற நிலையானது மேஷத்தை விட்டுச் சிறிது சிறிதாகச் மீன வீட்டிற்குச் செல்வதால் அதற்கேற்ப இந்த Solstices என்ற நிலைகள் தை ஆடி௴ ௧ தேதிகளிலிருந்து மார்கழி ஆனி கடைசி சில தேதிகளுக்குள் தள்ளப்பட்டு விட்டன. ஆகையால் தற்போதையஉத்தராயனம் மார்கழி௴ ஏறக்குறைய கடைசிக்கே ஆரம்பித்து விடுகிறது. தக்ஷிணயனமும் ஆனி௴ ஏறக்குறைய உடைக்கே ஆரம்பிக்கிறது. இவ்வுண்மைகளெல்லாம் மிகத் திருத்தமாகக் கணிதம் செய்யுங்கால் தோன்றுவன வாகும். பொதுவாக தை௴ ௧௳ உத்தராயனம் தொடங்குவதாகவும், ஆடி மாதம் ௧௳ தக்ஷிணயனம் தொடங்குவதாகவும் வைத்துக் கொள்வதுதான் பெருவழக்காக இருக்கிறது.

தமிழ்நாடு, Equator என்ற மத்திய ரேகைக்கு வடக்கேயுள்ளது. ஆனால் இங்கிலாந்து முதலிய நாடுகளைப்போல் மிகவும் வடக்கேயுள்ளதல்ல. இங்கிலாந்து முதலிய நாடுகள் மிகவும் வடக்கேயுள்ளபடியால் சூரியன் எக்காலத்திலும் அந்நாடுகளில் தென்புறத்திலேயே பிரகாசிக்கும். உச்சியைக் கடந்து ஒருபோதும் வடபுறம் வருவதே கிடையாது. இதனால் வேனிற்காலத்தில் 18 மணி நேரம் வெயிலும் 6 மணி நேரம் இரவும் கொண்ட நாளும், டிசம்பர் மாதம் போன்ற பனிக்காலத்தில் 18 மணி நேரம் இரவும் 6 மணி நேரம் பகலும் கொண்ட நாளும் அந்த நாடுகளில் இருக்கும். வேனிற் காலத்தில் 18 மணி நேரம் வெயிலிருந்தாலும் நமது நாட்டு உஷ்ண நிலைக்குப் பெரிதும் குறைந்தேயிருக்கும். இதிலிருந்து காலவேற்றுமைகள் அந்நாடுகளில் அதிக கொடுமையையே விளைவிக்கு

187150



மென்பது வெளிப்படை. நமது தமிழ் நாடு அவ்வாறு அமையவில்லை. காலவேற்றுமையால் சீதோஷ்ண வேற்றுமை அதிக கொடுமையை விளைவிப்பதில்லை. எனவே எல்லா நாடுகளைவிட நமது தமிழ்நாடே இயற்கையோடியைந்த வாழ்க்கையை இனிது நடாத்துவதற்குப் பெரிதும் இசைந்ததென்பது பெற்றும்.

இத்தகைய இயற்கை வாழ்வைச் செவ்வனே நடாத்தியதின் பலனாகத் தான் கடவுளுணர்ச்சி, தத்துவ ஆராய்ச்சி, அகத்துறைப் பயிற்சி முதலியன நமதுநாட்டில் தலைசிறந்து விளங்கின. இதுநிற்க.

சூரியன் தென்புறமிருந்து வடபுறம் வரும்போதே பூமிக்கு அருகிலும் வருகிறது. தென்புறம் மிகச் சாய்வாகயிருப்பதைவிட்டு, வடபுறமாக உயர்ந்து உச்சியை எட்டிப் பிறகு உச்சியைத் தாண்டி வடக்கிலும் வருங்காலத்து, சூரிய கிரணங்கள் சாய்வாக நிலத்தில் விழாமல், நேராகவும் செங்குத்தாகவும் விழுகின்றன. இதனால் சூரிய கிரணங்களிலுள்ள சக்தியை அதிகமாக பூமியும் பூமியிலுள்ள ஜீவராசிகளனைத்தும் பெறுகின்றன. சூரியன் அருகே வருவதாலும் இச்சக்தி அதிகரிக்கின்றது. இதனாற்றான் இயற்கை ஒளிர்வதும் மக்கள் இன்புறுவதும் உத்தராயனத்தில் அதிகமாயிருப்பதைக் காண்கின்றோம்.

இத்தகைய இன்ப மிகுதிக்குக் காரணமாயுள்ளவன் சூரியன் என்பதை நந்தமிழ் நாட்டினர் நன்குணர்ந்து சூரியன் இன்பத்தை அதிகரிக்கத் தொடங்கும் முதல் நாளாகிய உத்தராயனத் தொடக்கத்தில் சூரியனுக்குப் பூசைகள் செய்தனர். அந்தப் பூசையைத் தான் மகரசங்கராந்தியென்றும் பொங்கல் விழாவென்றும் நாம் கொண்டாடுகிறோம். மழையினால் நெற்பயிர் விளைவதால் மழைக்கதி பதியாகிய இந்திரன் என்ற "போகி"க்கும் "போகி பண்டிகை" ஒன்றைக் கொண்டாடுகிறோம். இவ்வுலகத்திலுள்ள உயிர் வாழ்க்கைக்கும் இன்பவாழ்க்கைக்கும் காரணனாயுள்ளவனும், சிவபெருமான் அட்டமூர்த்தங்களுள் ஒருவனாயுள்ளவனுமாகிய சூரியனுக்கு உத்தராயன புண்ணிய காலத்துள் முதல் நாளையும், சில காலம் போகியாயிருந்து மீண்டும் பிறப்பு இறப்பு என்னும் கடலில் மூழ்கும் இந்திரனுக்குப் "பீடை" மாதத்துக் "கடை" நாளையும் பூசைக்கெனவகுத்த நந்தமிழ் நாட்டுப் பண்டையோர் பேரறிவை எவ்வாறு மெச்சுவது ?

பிணி, அழுக்கு, பழமை முதலியவற்றைப் போக்கிப் புத்துயிரும் புதிய இன்பமும் பெறும் நிகழ்ச்சிக் குறிகுறியாக வீடு வாசல்களிலுள்ள எல்லா வகையான அசுத்தங்களையும் ஒழித்து, எரித்துப் போக்கி, கூடுமானவைகளையெல்லாம் புதுப்பித்து, புதுப்பாண்டங்களில் புது அரிசியைக் கொண்டு பொங்கல்வைத்து, நமது இன்பம் பொங்குவதைப்பொங்கல் விழாவெனக் கொண்டாடுகிறோம். கடவுள் உணர்ச்சி நமது நாட்டில் தினசரி வாழ்க்கையில் வேரூன்றியிருப்பதால் இவ்விழாவைக் கேவலம் களியாட்டாகக் கொள்ளாது, சிறந்த கடவுள் வழிபாடாகவே நாம் கொண்டிருப்பது நோக்கத்தக்கது. பெறுதற்கரிய மானுடப் பிறவியைத்தந்த நமது தாய் தந்தையர்களை மறத்தல் கூடாதென்றே இந்த நன்னாளில் தென்புலத்தார் கடனையும் ஆற்ற வேண்டுமென்று நமது நாட்டுப் பேரறிஞர்கள் வகுத்தனர். உழவு மிகுந்த நமது நாட்டில் மாடுகள் நமக்குச் செய்யும் பேருபகாரத்தை யுணர்ந்த முதுமக்கள் 'மாட்டுப் பொங்கல்' ஒன்றையும் கொண்டாடினர். " தான்பெற்ற இன்பம் பெறுக

RBDS, MNS.

இவ்வையகம்" என்ற உண்மை ஆவல் உடைய ஆன்றோர், தாங்கள் மட்டும் இன்புற்றிராது, தங்கள் நண்பர்கள் உறவினர்கள் முதலியோரையும் கண்டு அளவளாவி இன்புற்றிருந்தனர். இதையே "காண் பொங்கல்" அல்லது "கண்ணுப் பொங்கல்" என்று இப்போது வழங்குகிறோம்.

இன்ப வுணர்ச்சி மிகுதியும் தோன்றுங்கால் இடையூறுகள் கதிரொளி கண்ட கடும்பனிபோல் கால் விட்டோடும். எனவே, தை பிறந்தால் வழி பிறக்கும். தை பிறந்தால் இன்பம் பிறக்கும். இன்பம் பிறந்தால் இடையூறு அகலும்; நல்வழி பிறக்கும்.

நமது சமயத்துறையிலும் தைபிறந்தால் வழிபிறக்கும். சென்ற ஆண்டில் பலவகையான குழப்பங்கள் இருந்தன. அரசியல் துறையில் முதன்மை வகிக்கும் மந்திரிகள் நாத்திகம் பரப்பும்மகாநாடுகளைத் திறப்பதிலும் நடத்துவதிலும் தங்கள் பெயரைப் போக்கினார்கள். தமிழ்நாடு அவர்களை நீதிமுறை பிறழாது புறக்கணித்தது. அவர்கட்குப் பதிலாக வந்துள்ள மந்திரிகள் தாங்கள் செல்லுமிடமெல்லாம் திருக்கோயில் வழிபாடுசெய்யும்செய்தியைப் பத்திரிகைகள் வெளியிட வேண்டுமென்ற ஆர்வத்தோடு கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். இது நமது சமய முன்னேற்றத்துக்கு நல்லதொரு அறிகுறியாகும். அரசியல் துறையில் முதன்மை வகிப்போர் இத்தகைய ஆர்வமுடையவர்களாயிருந்தால்ஏனைய துறைகளிலுள்ளோர் அவர்களை எளிதில் பின்பற்றுவர் என்பதில் எட்டுணை ஐயமுமில்லை.

நமது சமாஜத்தின் அரும்பணிக்கும் தைபிறந்தால் வழிபிறக்கும். முதலாவதாக நமது சமாஜ அங்கத்தினர் இந்த தையிதழைச் சந்தாசெலுத்திப் பெற்றுக்கொண்டு சமாஜத்துக்குப் பொருள் உதவுவர். ஒவ்வோர் அங்கத்தவரும் புதுவதாக ஓர் அங்கத்தவரையேனும் சேர்த்துக் கொடுத்தல் நமது சமாஜத்துக்குப் பொங்கல்விழாக் காணிக்கையாகச் செலுத்தக்கூடிய பணியாகும். இரண்டாவதாக நம் சமாஜம் மேற்கொண்டுள்ள தேவாரத் திருமுறை வெளியீட்டுப் பணி இனிது நிறைவேற வேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கு உண்மையாக இருக்குமாயின், நமது சமாஜத்தினர் ஒவ்வொருவரும் பொங்கல் பரிசளிப்புக்காகவாவது ஒவ்வோர் அப்பர், சுந்தரர் தேவாரப் புத்தகங்களைவாங்கி உபகரித்தால் அந்த பொருளைக்கொண்டே, அந்த விற்பனை யூட்டும் ஊக்கத்தைக்கொண்டே. சம்பந்தர் தேவாரத்தையும் விரைவில் வெளியிட இயலும். 'சம்பந்தர் தேவாரம் எப்போது வருகின்றது எப்போது வருகின்றது' என்று வினவாதார் ஒருவருமில்லை. சம்பந்தர் தேவாரத்தை அச்சிட்டு வெளியிடுவதற்குப் பணம் இருக்கிறது. வாங்கி ஊக்க மளிப்பதற்கே ஆளில்லை என்ற விடையையே நாம் கூறவேண்டியிருக்கிறது. கேவலமான புத்தகங்களையெல்லாம்பலரூபாய்கள் கொடுத்து லக்ஷக்கணக்கில் வாங்குவோர் பிறவிக்கு மருந்தாகிய தேவாரத்தைச் சில அணுக்கள் கொடுத்து வாங்கக் கூசலாமா? புத்தகம் வைத்திருப்பவர்கள்கூட சமாஜப் பதிப்பை வாங்கவேண்டும் என்ற ஆவலுடனும் ஆர்வத்துடனும் வாங்குவதல்லவோ அழகாகும். மேற்கொண்டு விரித்துக் கூறுவது மிகையாகும்.

சென்ற ஆண்டில் இளைஞர் மகாநாடு ஒன்றும், மங்கையர் மகாநாடு ஒன்றும், கும்பாபிஷேக மகாநாடு ஒன்றும் மிகச் சிறப்பாகவும் புனிதமாகவும் நடைபெற்றன. தை பிறந்தால் வழி பிறக்கும் என்றதற்கேற்ப இளைஞர்களும் மங்கையரும் கூட்டங்களோடமையாமல் ஆண்டு முழுமையும் ஒழுங்காகச் சமயப்பணி செய்யும் செயலில் வழியானது பிறக்கும் என்று எதிர்பார்க்கிறோம். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக, பொங்கும் மங்களம் எங்கும் தங்குக, பொங்கும் மங்களம் எங்கும் தங்குக என்று முக்காலும் வழுத்துகின்றோம்.

---

# சிவலிங்க மான்மிய விளக்கம்

[மகா வித்துவான் - தணிகாசல முதலியார்]

[குறிப்பு:— இவ்வாசிரியர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சீடருள் ஒருவர் - ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் முதலிய பேறிஞர்களால் "சைவ சித்தாந்த பானு" என்று கருதப்பட்டவர்—திரு. வி. கலியாண சுந்தர முதலியார் முதலிய பலருக்கு சித்தாந்த பாடம் கற்பித்தவர்—நமது சமாஜத்தில் "திருவருட்பயன்" போதித்தவர்—திரு மயிலாப்பூரில் எண்பது ஆண்டுகள் வசித்தவர்—இவர் சிவபதமடைந்து ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டுகள் ஆகின்றன—பல அருமையான பொருள்களை யெழுதி எமது அருமைத் தந்தையாரிடம் இப்பெரியார் கொடுத்தனர். அவை இப்பத்திரிகையில் முறையாக இனி வெளி வரும்—பத்திராசிரியர்.]

மகா விராட் புருடனுடைய பிரமரந்திரத்துக்குக் கீழ் எண் கலைகளும் பிரமரந்திரத்துக்குமேல் பன்னிரண்டு கலைகளுமாகிய இருபது கலாரூபமெனப்படுஞ் சுத்தமாயையே குடிலையெனவும், அக்குடிலைக் காதாரமாய் அதனையதிட்டித்து நிற்பது பராசத்தியெனவும், அப்பராசத்தியை அபின்னமாகவும், குணமாகவும், அங்கமாகவும் கொண்டிருப்பது பரசிவமெனவும் வேதாகமங்கள் கூறும். குடிலையும் சத்தியும் சிவமுமாகிய மூன்றும் ஒன்று கூடியது சிவலிங்கமாம். அச்சிவலிங்கம் ஆசனம், மூர்த்தி, மூர்த்திமான்களாகிய சிவக்குறியாம்.

அம்மூன்றனுள் ஆசனமாவது பீடமும் இலிங்கமும் பெற்றமையப்பட்ட ரூபாகரம். அஃதெங்ஙனமெனில், பீடமும் இலிங்கமும் முறையே சத்தியும் சிவமும் விந்துவும் நாதமுமாம்.

பீடமெனப்படும் ஆவிடையாரும் இலிங்கமுமென்னு மிரண்டுங் கூடிய சிவலிங்கமும்; வர்ணமைம்பத்தொன்றும், பதமெண்பத்தொன்றும், மந்திரம் பதினொன்றும், கலையைந்தும், தத்துவம் முப்பத்தாறும், புவனமிருநூற்றிருபத்து நான்கும் ஆகிய ஆறத்துவாவுங் கூடிய பேரண்டமும்; சிற்றண்டமெனவும் பிண்டமெனவும் கூறப்படுஞ் சரீரமும்; ஆகிய இம்மூன்றும் சமமாயிருக்கும்.

இச்சிவலிங்கம் தன் கீழ்ப்பீடம் நகாரமும், நடுக்கண்டம் மகாரமும், மேற்பீடம் சிகாரமும், நாதக்குழி வகாரமும், இலிங்கம் யகாரமுமாகிய பஞ்சாக்கர ரூபமாம். இன்னும் கீழ்ப்பீடம் அகாரமும், நடுக்கண்டம் உகாரமும், மேற்பீடம் மகாரமும், நாதக்குழி விந்துவும், இலிங்கம் நாதமுமாகிய ஓரெழுத்தொரு மொழியாகிய பிரணவமாம். இன்னும் கீழ்ப்பீடம் நிவிர்த்தி கலையும், நடுக்கண்டம் பிரதிஷ்டா கலையும், மேற்பீடம் வித்தியா கலையும், நாதக்குழி சாந்தி கலையும், இலிங்கம் சாந்தியதீதா கலையுமாகிய பஞ்சகலாசத்தி ரூபமாம். இன்னும், கீழ்ப்பீடம் பிருதிவியும், நடுக்கண்டம் அப்புவும், மேற்பீடம் தேயுவும், நாதக்குழி வாயுவும், இலிங்கம் ஆகாயமுமாகிய பஞ்சபூதாத மகமுமாம்.

இவ்வாகாய முதலிய பஞ்சபூதப் பிரேரகர்களாகிய ஸ்ரீ சதாசிவாதி காரணேசுவரர்களைவர்களின் பிரேரியங்களாகிய தன் மாத்திரைகளைந்தும், ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்களைந்தும், தூலாந்தக்காரணங்களைந்தும், கலாதி சூக்குமாந்தக் காரணங்களைந்தும், பரமெனவும் அதிசூக்குமமெனவும் படும் நாதாதியைந்தும் ஏனையவை யெல்லாமும் சிவலிங்

கத்தின் கண்ணுள்ளனவே யன்றி வேறுகாவாம்.

பிருதிவி முதல் குடிலையீறுகக் கூறப்பட்டது ஒரு சிவலிங்க ரூபமாம். அது சிவனுக்கு ஒரு மந்திர சிங்காசனமாம். இவ்வண்டத்தைத் தாங்கிய ஆதாரசத்தி சிவசத்தியேயாம். அநாசிருத வடிவிற் பிறந்திடும் அநந்தர் இவ்வாதார சத்தியோடு கூடி அசுத்த மாயையைப் பிரேரித்துக் கொண்டிருப்பர். இம்மந்திராசனமே சிவனெழுந்தருளியிருக்கும் பதுமாசனமாம். இலிங்கத்தின் கீழ்ப்பீடம் அத்தாமரையின் கிழங்கும், வீசமும், முளையுமாம். பீடத்தின் நடுக்கண்டம் அத்தாமரையின் கொடியாம். மேற்பீடத்தின் கீழ்ப்பக்கம் தாமரை மலரினது புறவிதழாம். மேற்பக்கம் எட்டிதழ்த் தாமரை மலராம். மேற் பீடத்துக்கும் இலிங்கத்துக்கும் நடுவே இலிங்கத்தைச் சூழ்ந்திருக்கும் வடிவம் அம்மலரினல்லிகளாகிய கேசரங்களாம். இலிங்கம் அத்தாமரையின் காயாகிய கர்ணிகையாம். அவ்விலிங்கத்தின் மேற்பக்கத்தினுள் வட்டம் விதைவட்டமாம். இவற்றினுண்மை "அமலனிருந் தருளும் போருகத்தின்" என்னுஞ் சதாசிவரூபச் செய்யுளானுணர்க. அது வருமாறு:—

சதாசிவ னெழுந்தருளி யிருக்கும் பதுமாசனத்தின் கிழங்கு பிரமாண்டமாகிய பிருதிவி தத்துவமாம். இதற்கிடம் ஆவிடையாரின் கீழ்ப்பீடமாம். அத்தாமரையினுளமாகிய கொடி அப்பு தத்துவமுதற் கலாதத்துவ மீறுகிய இருபத்தொன்பது தத்துவமாம். இதற்கிடம் ஆவிடையாருடைய நடுக் கண்டமாம். அந்நாளத்தின் கண்டங்களாகிய முள்ளுக்கள் அமரேசன் முதலிய புவனங்கள் எழுபத்திரண்டாம். அந்நாளத்தின் நூல் புத்தி குணமாகியபஞ்சாசற் பாவமாம். புறவிதழ் மாயா தத்துவமாம். இதற்கிடம் மேற்பீடத்தின் கீழ்ப்பக்கமாம். உள்ளிதழ் சுத்தவித்தியா தத்துவமாம். இதற்கிடம் ஆவிடையாரின் மேற்பீடமாம். கேசரங்களாகிய அல்லிகள் கலாசத்திகளறுபத்து நான்காம். இதற்கிடம் மேற்பீடத்துக்கும் இலிங்கத்துக்கும் நடுவே இலிங்கத்தைச் சூழ்ந்திருக்கும் வடிவாம். கர்ணிகையாகிய காய்குடிலையாம். இதற்கிடம் முகிழ்தமாகிய இலிங்கமாம். அத்தாமரைக் காயின் விதைகள் ஐம்பத்தோ ரக்ஷரமாம். இதற்கிடம் இலிங்கத்தின் மேற்பக்கத்துள் வட்டமாம். மேற்பீட வட்டமாகிய இதழ் வட்டமும், மேற்பீடத்துக்கும் இலிங்கத்துக்கும் நடுவே இலிங்கத்தைச் சூழ்ந்திருக்கும் வடிவமாகிய கேசர வடிவமும், இலிங்கத்தின் மேற்பக்கத்து வெளிவட்டமாகிய கர்ணிகை வட்டமும், இலிங்க நடுவிலுள்ள வட்டமாகிய விதை வட்டமும் என்னும் நான்கும் முறையே ஞானசத்தி, கிரியா சத்தி, இச்சா சத்தி, ஆதிசத்தி என்னுஞ் சத்திகளால் வியாபிக்கப்பட்ட சூரிய மண்டலம், சோம மண்டலம், அக்கினி மண்டலம், சத்தி மண்டலம் என்னும் நான்கு மண்டலமாகக் கூறப்படும். இதுவே சிவலிங்க மெனப்படும் சிவாசனம். இதுவே சிவாசன விலக்கணம் என்று சொல்லுவர் வேதாகம நூன்முற்றுமுணர்ந்த பெரியோர். இனிச் சிவமூர்த்தியிலக்கணமும் மூர்த்திமானிலக்கணமும் வருமாறு:—

இனிச் சிவமூர்த்தியாவது "திடமரி சாதாக்கிய முதற் சமனை முடிவாகச் சிவமூர்த்தியதாகும்" என்னும் வாக்கியப்படி சாதாக்கியகலை முதற் சமனகலை யீறுகச் சொல்லுங் கலைகளாம். பரநாதம், பரவிந்துவே சிவமூர்த்தி யென்றும், பஞ்ச சத்திகளுஞ் சமனையுஞ் சிவமூர்த்தி யென்றும், அஷ்டதிரி மசத்கலாசத்திகளே சிவமூர்த்தி யென்றுங் கூறவும்படும்.



இனி மூர்த்திமானாவது தத்துவப்பிரகாசத்திலே,

"உருவு மருவுங்கலப்பு
மாயன்றிக் குறியுமுறையு
முணர்ந்தறி வரிதாய்க்
குணமெல்லை யிலதாய்
அருவமா யானந்தக்
குறியாயற் பதமாய்
நாமயமாய் கிராமயமாய்
சலமாயின் பாய்த்
தெரிவரிதா யனுபவமாய்
முத்தசித்தா யணுவாய்ச்
செல்கதியாய்ப் பல்லுருவாய்த்
தீமைநன்மை யின்றாய்
உரையிறந்துங் கரையிறந்து
மொளியாகி வெளியா
யோங்குவது தற்சிவமென்
றுங்குரைக்கு நூலே"

சிவப்பிரகாசத்திலே,

எனவும்,

"பலகலை யாகமவேதம்
யாவையினுங் கருத்துப்
பதிபசுபாசந் தெரித்தல்
பதிபரமே யதுதான்
நிலவுமரு வுருவின்றிக்
குணங் குறிகளின்றி
நின்மலமா யேகமாய்
நித்த மாகி
அலகிலுயிர்க் குணர்வாகி
யசல மாகி
யகண்டிதமா யாநந்த
வுருவா யன்றிச்
செலவரி தாய்ச்
செல்கதியாய்ச் சிறிதாகிப்
பெரிதாய்த் திகழ்வது
தற்சிவமென்பர் தெளிந்துளோரே"

எனவும், இப்பரசிவம் தரைமுதல் சமனையீறுக வியாபித்திருக்கும் ஆசனம்மூர்த்தி மூலங்களை,

"மேதினியி லுயர்வித்தை
வியாத்தியான சத்திமண்டல
மளவாத் தீயனவிலாத
சிவாதன மாகும்
திடமலிசாதாக்கிய முதற்சமனை
முடிவாகச் சிவமூர்த்தியதாகும்
தரைமுதற்சமனை யளவுநிலாவிய
பாசிவபூரண மூலமெனப்படும்"

என்னுஞ் சதாசிவரூபச் செய்யுளானுமுணர்க.

---

# நல்லொழுக்கம்

[அநுராசபுரம் - சி. நமசிவாயம் பிள்ளை]

அரிதாகிய மக்கட்பிறவி யெடுத்துள்ளோர் யாவராலும் உயிரினுஞ் சிறந்ததாகப் போற்றிக் கைக்கொள்ளற் பாலது நல்லொழுக்கமேயாம். இங்கே நல்லொழுக்கமென்றது மனமொழி மெய்களால் தீயனவற்றை அறவே நீக்கி நன்னெறியாகிய பெருநெறி பிடித்தொழுகலேயா மென்க. மனதினாலே தீய எண்ணங்களை எண்ணுதலும், வாக்கினாலே தீயசொற்களைச் சொல்லுதலும், மெய்யினாலே தீய செயல்களைச் செய்தலும் தீயொழுக்கத்தின் பாற்படும்.

உலகினுக்குய்யு நெறி காட்டியவுத்தமர் யாவரிடத்தும் நல்லொழுக்கம் தலைசிறந்து விளங்கினமை கவனிக்கத் தக்கது. இந்நாளிலும், இந்தியநாட்டின் தவப்பயனாய் உதித்த நங்காந்தி யடிகள் நல்லொழுக்கமே திருமேனியாகக் கொண்டு செயற்கருஞ் செயல்கள் பலவற்றைச் செய்து உலகம் முழுவதும் உச்சிமேற்கொள்ளும் பெருந்தகைமையும் உடையராயினர். நல்லொழுக்கத்தின் அருமை பெருமைகளை யறியாது அல்லலுழக்கும் மாந்தர்க்கு அதன் விழுத்தகு சிறப்பினையும் அதனாலுண்

டாகும் ஆத்மசத்தியின் திறனையும் நன்கு விளக்குதற்கன்றோ அருள் வள்ளலாகிய இறைவன் இப்பெரியாரை உலகினுக் கீந்தருளினன். அடிகள் தமது சீரிய ஒழுக்கத்திற்குப் பங்கம் வருமிடத்து உயிரையு மொரு பொருளாக மதியார். என்னை? நல்லொழுக்கமின்றேல் உயிரிருந் தென் பயன்? விழுமிய ஒழுக்கமில்லார் விலங்கினுக் கொப்பாவரன்றோ? அத்தகையோர் மக்கட்பிறப்பின் பெரும்பயனை எவ்வாறு அடைதல் கூடும்?

நல்லொழுக்க மில்லாதவர்கள் இவ்வுலகில் உயிரோடிருக்கும்போது பிறரால் இகழப்படுதலுமன்றி இன்னல் பலவற்றிற்கும் ஆளா கின்றார்கள். இறந்த பின்னரும் நிரயம் புகுந்து துன்பமனுபவிக்கிறார்கள்.

"நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கம்
தீயொழுக்க மென்று மிடும்பை தரும்"

என்று தமிழ்மறையுஞ் செப்புகின்றது. ஆகையினால் நல்லொழுக்க முடையவர்கள் இவ்வுலகிடைத் துன்பங்களின்றி வாழ்ந்து பொன்றாப் புகழையும் நிறுவி இறந்தபின்னர் இறைவன் திருவடி நீழற்கீழ் இணையற்ற வீட்டின்பம் நுகர்வார்களென்பது ஒருதலை.

ஒருவன் உயர்ந்த அல்லது இழிந்த குலத்தினனாதல் அவனது ஒழுக்கத்தைப் பொறுத்துள்ளதென அறிவுடையோர் கூறுவர்.

"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

என்பது தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் தம் திருவாக்காகும். "பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்கும்" என்று நம் பெரு நாவலரே பின்னுங் கூறியிருக்கின்றமையால், பிறப்பினால் மாத்திரமே ஒருவனை உயர்குலத்தவனென்றும் மற்றொருவனைத் தாழ்ந்த குலத்தவனென்றுஞ் சொல்லுதல் தவறு. இவ்வாறாயின், ஒருவனது குலத்தை நிச்சயித்தறிதல் யாங்ஙனமெனின், மேற்காட்டியவாறு, நல்லொழுக்கத்தின் வழுவா தொழுகு மொருவனை உயர்குலத்தினனென்றும், தீயொழுக்க முடையானை இழிகுலத்தின னென்றுங் கொள்ளுதலே சால்புடைத்து. நிற்க நல்லொழுக்கமே பேரின்பமயமான இறைவனது திருவடித் தாமரைகளைப் பெறுதற்கு ஒரு சிறந்த நெறியாகவும் அமைந்துள்ளது என்னும் உண்மையை விளக்க,

"புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கிமேலாம், நன்னெறி யொழுகச்செய்து நவையறு காட்சிநல்கி, என்னையும் அடியனாக்கி இருவினைநீக்கி யாண்ட, பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி."

என்னுந் திருப்பாடலே போதிய சான்றாகும். தீயொழுக்கத்தை மேற்கொண்டொழுகுதலை நீக்கி நன்னெறிக்கண் நின்றாலன்றி இறைவன் நவையறு காட்சி நல்கி இருவினை நீக்கி ஆளான் என்பது இத்திருப்பாட்டால் அறியக் கிடக்கின்றது. எவ்வுயிரும் சந்நிதியாய்க் கொண்டிலங்கும் எம்பெருமானது இன்னருட்டிறத்தைப் பெற்று இன்பமெய்துவதற்கு நற்சாதனமாயுள்ளது நல்லொழுக்கமே யென்றறிந்தும் அதன்வழி ஒழுகாதவர்கள் பெறற்கரும் பிறவியின் பெரும்பயனை இழந்த பேதையரேயன்றோ?

இனி, நல்லொழுக்கமும் இறை வழிபாடும் ஒன்றற்கொன்று இன்றியமையாதனவாயிருக்கின்றன. ஏனெனில் இறைவழிபாடியற்றும் ஒருவன்மாட்டு அன்பு, இரக்கம் முதலிய சிறந்த குணங்கள் உளவாதலோடு, அவன்தான் வழிபடுகின்ற கடவுளாலும், அவன் அருள்பெற்ற அடியவர்களாலும் அருளிச் செய்யப்பட்ட வேதாகமங்களின் வழி நிற்க முயல்வான். மற்று, இறைவழிபாடில்லாதொருவனோ அவ்வாறு நிற்றல் அரிதினுமரிது. இதனால் நல்லொழுக்கத்திற்கு உறுதுணையாயுள்ளது கடவுட்டியானமேயென்று அறியற்பாலது. அன்றியும் நல்லாரிணக்கம், உண்மை நூற்கல்வி என்பனவும் நல்லொழுக்கத்திற்கு அரண் செய்து நிற்பனவே.

---

# திருவாசக இருதயப்பாசுரம்

[E. T. இராஜேஸ்வரி அம்மாள் B. A.]

"இன்றெனக் கருளி யிருள் கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலாற் பிறிது மற் றின்மை
சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்
[தொன்றாந்
திருப்பெருந் துறை யுறை சிவனே
ஒன்று நீயல்லை யன்றி யொன் றில்லை.
யாருன்னை யறியகிற் பாரே."

—கோயிற் றிருப்பதிகம்

பெரியோர்களே, நமது சமய குரவர்களுடைய அருட்பெருஞ் செல்வங்களான பதிகங்களுக்கு உரைசொல்லுதல் அடாதென்பது ஆன்றோர் கருத்தாம். அடியேனுக்கு உரைசொல்லும் ஆற்றல் உண்டென்று எண்ணி இதற்கு விருத்தி உரை பகர யான் இங்கு வரவில்லை. திருவாசகமாகிய பாற்கடற் கரையுள் நின்று அதைக்கண்டு களித்த ஆனந்தத்தைக் கூறுவதில் குற்றம் இன்றென்றும், கடலின் அளவை ஒரு குழந்தை குறிப்பிடுவது போல அளக்கலாகா ஆழமும், மனதுக் கெட்டாத அகலமும் நீளமும் உள்ள இக்கடலை ஒரு படமாக எழுதிக்காட்டுவது நவீன நாகரிகத்தின் தன்மை யாதலாலும், அவ்வாறு காட்டினாலன்றிப் பெரியோர்கள் முன்வந்து குற்றங்களைந்து, குணங்களைப்போதிக்க நேராதாதலாலும், அதற்கு இப்போவையே தக்க இடமாதலாலும், பெரியோர்களிடம் கேட்டுக் கிஞ்சித்து அறிந்தும் அறியாததுமாயிருக்கின்ற விஷயங்களை இவ்விடம் சொல்லத் துணிந்தேன். ஆதலால் அடியேன் செய்யும் உபந்நியாசத்திலுள்ள சொற்குற்றம் பொருட்குற்றம் முதலியவற்றை மன்னித்துக் குணங்களுளவேல் அவைகளை மாத்திரம் ஏற்று அடியாளை ஆசீர்வதிப்பீர்களென்று நம்புகின்றேன்.

இப்பாசுரத்தில் யான் முக்கியமாய் விரிவுரையாய்ச் சொல்ல விரும்புவது யாதெனில், இப்பாசுரத்திலுள்ள பெயரெச்சமும், வினை எச்சமும், வினை முற்றும், வினைத்தொகை நிற்கின்ற நிலைகளின் பொருத்தமும், அவற்றின் அழகும், உடன்பாடு எதிர்மறை வினைகளிற்குந்தொந்தங்களுமேயாம். அவ்விஷயம் ஒன்றையே முக்கியமாய்க் கருதி அடியேன் சொற்பொழிவுநிகழ்த்த உங்கள் உத்தரவைக் கோருகிறேன். ஏனெனில் மணிவாசகப் பெருமானருளியபாசுரம் ஒன்றை எடுத்து விருத்தியுரைபகரவேண்டுமெனின், ஒவ்வொரு சொல்லுக்கும் வருடக்கணக்குகள் போதா. ஆதலால், குறித்த கால அளவிற் சொற்பொழிவை நடத்தக்கருதுவதால், அவ்வாறு நிகழ்த்தப் பன்முகமாயுள்ள பாசுரத்தின் ஒரு முகத்தையே நாடி அதன் இனிமையைக் காண்போமாக :—

## இன்று அருளி

'இன்று' என்பது நிகழ்காலம். அது, 'அருளி' என்னும் இறந்த கால வினை எச்சத்தை அவாவுகின்றது. மணிவாசகப் பெருமானுக்கு இலக்கணம் தெரியாதா? "இன்றெனக் கருள" என்று எழுதத் தெரியாதா? "வாராக் காலத்து நிகழுங் காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைச் சொற்கிளவி, இறந்த

காலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள் கோள் என்மனார் புலவர்'' எனக்கால வழுஅமைதியாய்க் கொள்ள லாகுமோ? மணிவாசகப் பெருமான் நடையை இப்பாசுரத்தில் கவனிக்கும் காலையில், விரைவுமுதலிய காரணங்களால் இப்பெயருக்கும் அவ்வினை எச்சத்திற்கும் பேதம் ஏற்படுவதாய்க் காணப்படவில்லை. மிகவும் நிதானமாகவும் ஒவ்வொரு சொல்லும் பொருளை மேனக் கோலில் நிறுத்து உரைப்பது போலும் காணப்படும் இப்பாசுரத்தில் உரைத்தது வழுவுமாகாது, வழு வமைதியுமாகாது. இன்றேல் மற்று என்னை எனின்? இலக்கணக்காரர் அறிந்து ஆராயாத வினை எச்ச இலக்கணத்தை மணிவாசகப் பெருமான் இங்குவிளக்குகின்றார். நாம் அறிந்த முக்காலத்தில், இறந்த காலம் நேற்று, எதிர்காலம் நாளை எனினும், இன்றின் ஆதி எவ்விடத்தில் என்பதும், அந்தம் எவ்விடத்தில் என்பதும் கண்டிலோம். நென்னலும், நாளையும் சந்திக்குமிடமே இன்றையாதலின், அதன் அளவையானது சிறிதுக்குச் சிறிதாயும், பெரிதுக்குப் பெரிதாயும் காட்டக் கூடிய தன்மையதாயிருக்கிறது. 'இன்று பகல் ஒரு மணி' என்பது நிகழ்காலம் என்று கொள்வோம். இதற்கு முன்னதான பகல் பத்துமணி இறந்தகாலமாகின்றது. ஆயினும், உலக வழக்கத்தில் 'இன்று பகல் பத்துமணி' என்றுசொல்லுகின்றோம். 'இன்றுபகல் பத்துமணிக்கு நமது நண்பர் வந்தார்' என்றும், 'இன்றுபகல் நாலு மணிக்கு வருவார்' என்றும் சொல்கிறோம். ஏனெனில் ''இன்று'' என்று வான சாஸ்திரிகள் கணித்த அளவைக்குள், இப்பத்துமணி இருப்பதனாலேயாம். ஆங்கில சாஸ்திரிகள் இரவு பன்னிரண்டு மணியிலிருந்து மறு நாளிரவு பன்னிரண்டு மணிவரை ஒரு நாள் எனக் கொள்வர். நம்மனோர் சூரிய உதயமுதல் (காலை 6 மணி) மறுநாள் சூரிய உதயம் வரை ஒருநாள் எனக் கொள்வர். அதற்குள் சென்ற பாகமும், வரும் பாகமும் குறிக்கும் போது ''இன்று'' எனவே கொள்கின்றோ மன்றோ?

ஆகையால் மணிவாசகப் பெருமான் ''இன்று'' என்று கூறிப் போந்ததற்குப் பொருள்யாதென ஆராய்வோம். புகலிவேந்தர் :—

''இன்று நன்று நாளைநன்
றென்று நின்ற விச்சையால்
பொன்று கின்ற மானிடப்
போர்வை விட்டுப் போதுமின்''

என்ற பாசுரத்தின்கண், இன்று, நாளை என்னும் தினக்காலக் குறிப்பை மணிவாசகப் பெருமான் எண்ணினாரோவெனின், அவ்வாறெனை வற்புறுத்திக் காட்டப்போதிய ஆதாரவில்லை.

''இன்று'' என்பது எடுத்த தேகத்தின் பயனாகிய ஆத்மஞானம் பெற முயன்றதுமுதல், சீவன்முக்தி நிலைவருமளவும் உள்ள காலம் முழுவதுமாம். இதற்கு முன்னர் சென்ற நாளெல்லாம் பிறவா நாளேயாம். கொன்னே கழிந்த நடலை வாழ்வில் ஈடுபட்ட நாட்கள் நாட்கள் அல்ல. ஆங்கிலத்தில் ''டையஸ் நான்'' (Dies non) என்று ஞாயிற்றுக்கிழமையைத் தள்ளுவது போல, அரனடிசேரும்நெறியோம்பாது,வேறு நெறியிற் சென்ற கால முழுவதும் எவ்வகையிலும்இறந்ததாகக்கொண்டு,சன்மார்க்கத்தில் புகுந்தது முதல் சாயுச்சிய மெய்தும் வரை ஒரே நாளாகவும், அதுவே வாழ்நாளாகவும் இராப் பகலற்ற மெய்யறிவுள்ள மேலோர் கொள்



வர். மணிவாசகப் பெருமானும் இப் பாசுரத்தில், அருளி - இருள் கடிந்து-ஞாயிறு போன்று—நின்ற—தன்மையை நினைப்பற நினைதலும், அச்சுடரைக் கொண்டு எப்பொருளையும் ஆராய்தலும், ஆராய்ந்த முடிவில் உலகத்தில் காணப்படும் ஜட பதார்த்தங்கள் அவன் ஆகாத தன்மையையும், ஆயினும் அவற்றின் தோற்றமும் உருவமும் அவனன்றி இன்மையையும், அறிதலும், அவ்வுண்மை அணுவுக்கணுவிலும் மகத்துக்குமகத்திலும் திகழ்வதும் 24 மணி நேரத்துக்குள் என்று நாம் கொள்வதற்கு ஏது இல்லை. ஆதலால் ''இன்று'' என்பது ஞானம் உதிக்க ஆரம்பித்த கால முதல், சிவனருள் பூரணமாய்ப் பெற்றுத் திகழும் காலம்வரையிலுமாம். எனவே 'இன்று' என்பது இலக்கண வரம்பில் இறந்த காலத்தையும்,சற்று எதிர்காலத்தையும் தழுவும் காலப் பெயராய் இங்குகாணப்படுகிறது. ஆகையால்,இறந்தகாலவினை எச்சமாகிய ''அருளி'' என்பதையும், இறந்தகால வினை முற்றாகிய ''நினைந்தேன்''என்பதையும் இச்சொல்அவாவுதலுடன், முன்னிலையாய் விளங்கும் சிவபெருமானை ''ஒன்றும்'' என எதிர்காலப் பெயர் எச்சத்திலும் மணிவாசகப் பெருமான் குறித்து விளக்கி இருக்கின்றனர்.

## எனக்கு

இனி ''எனக்கு'' என்பதன்பொருள் யாது? யான் எனது என்னும் பற்றையறுத்த நிலையா? அல்லது பற்றறாது நின்ற நிலையா? என ஆராய்வோம். 'நான்' என்னும் அகங்காரமானது ஒழிய, ''அவனருளாலே அவன்தாள் வணங்க''வும் நின்ற நிலையாகும்; அப்போதுபாசத்தில்கட்டுண்ட பசுவானது பாசமற்று வெளிவரும் நிலையாகும். எனவே, ''அடியேனுக்கு, நாயேனுக்கு, புலையேனுக்கு'' என்னும் சொற்றொடர்களை மணிவாசகப்பெருமான் வேறு சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பதுபோல் இவ்விடத்தில் கூறுதுவன், ஆங்கார சொரூபமான 'எனக்கு' என்னும் சொல்லைத் திருவாய் மலர்ந்தருளினார்? அருள் வேண்டியது, இருள் கெடும் நிமித்தம்: அகந்தையில் மூழ்கிய பசுவுக்கேயாம். அருள்பெற்ற முத்தர்களுக்கு மீண்டும் அருள் என்பது பயனில் வினையாம். 'அடியேன் அருள்பெற்ற காலத்தில் அகங்காரத்தில் ஈடுபட்ட ஜீவனாயிருந்தேன், அக்காலத்தில் என்னை வந்து ஆண்டாய்' என்பதைக் குறிப்பதுபோல ''எனக்கு அருளி'' என்றனர். இக்கருத்தையே மற்றோர் இடத்திலும்,

''சீலமின்றி நோன்பின்றிச்
செறிவேயின்றி அறிவின்றித்
தோலின்பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்துகிடப்பேனை
மாலுங்காட்டி வழிகாட்டி
வாராவுலக நெறியேறக்
கோலங்காட்டி யாண்டானைக்
கொடியேனென்றோ கூடுவதே''

எனக் கூறியுள்ளார். மற்றும் இக்கருத்தே,

''நெறியல்லா நெறிதன்னை
நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே
திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத
கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ண மருளியவாறார்
பெறுவாரச் சேரவே''

என்றவிடத்திலும் காணப்படுகின்றது. இத்தகைய அருளின் பயனாவது, உலகாயதநடையிற் செல்லும் பசுவைச்சன்மார்க்கத்தில் திருப்புவதுமாம்.

இவ்வுடலை 'நான்' என்றும், இவ்வுடல் சம்பந்தத்தை 'என' தென்றும் கொண்டதன்மையை அறவே ஒழிக்கும் வகையாகும். இதை மானத சாஸ்திரத்தில் (Psychology) ஆங்கிலேயர் உள்ளாராய்ச்சி (Introspection) என்பர். ஆனால் ஆங்கில மானத சாஸ்திரம் சைவ நெறியின் சீர் பெருததினால் இருதய கமலத்தில் வீற்றிருக்கும் முழுமுதற் கடவுளை நாடிச் செல்வதில்லை; அந்தக் கரணங்கள் முதலிய தத்துவங்களில் ஓடி வீண் பொழுது ஓட்டும். அந்தக் காணத்தில் எல்லாத் துன்பங்களுக்கும் அடிப்படையாய் நிற்கும் 'நான்' என்னும் அகங்கார தத்துவத்தைச் சிவனருளாலே ஒழிப்பதற்குச் செய்யும் வினையை மணிவாசகப் பெருமான் திருக்கோத்தும்பியில் (தான் இடையருது செய்து நின்ற தொழிலை) விளக்கினர். அது :—

"நானார்? என் உள்ளமார்?
ஞானங்களார்? என்னை யாரறிவார்?
வானோர் பிரான் என்னை
ஆண்டிலனேல்? மதிமயங்கி
ஊனார் உடை தலையில்
உண்பலிதேர் அம்பலவன்,
தேனார் கமலமே, சென்றூதாய்
கோத்தும்பீ!"

என்பது. இருள் கடிவதற்கு மூடபக்தி மிகவும் பயன்படாது.

"உடம்பெனு மனைய கத்து
வுள்ளமே தகளி யாக
மடம்படு முணர்நெய் யட்டி
யுயிரெனுந் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயா லெரிகொள
விருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே."

என்றார் திருநாவுக்கரசு நாயனர். எனவே, "எனக்கு" என்னும் சொல்லானது அஞ்ஞான இருளால் மூடப்பட்டுஅகங்காரத்தில் அழுந்திய பசுவாகிய "எனக்கு" என்னும் பொருளைப் புலப்படுத்துகின்றது.

## இருள் கடிந்து

"இருள் கடிந்து" என்னும் சொற்றொடரில் இருளாவது யாது? சூரிய வெளிச்சத்தில் நமது வாழ்நாளிலுள்ள பகலும் இருளேயாம். இருள் என்பது, பொருள் அல்லவற்றைப் பொருளாகக் காண்பது. இருளே, மருளுக்கும்தோழனுகும்.

அதைத் திருநாவுக்கரசு நாயனர்.

"இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாதே சிந்தைதனைத் தெருட்டித் தன்
சிவலோக நெறியறிய சிந்தை தந்த [போற்
அருளானை ஆதிமா தவத்து ளானை
ஆறங்க நால்வேதத் தப்பால் நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளு ரானைப்
போற்றுதே யாற்றநாள் போக்கி னேனே"

என, இப்பாசுரத்தில் விளக்குவதை நாம் காணலாம். ஆதலால் இருள் என்பது உலக வழக்கத்தில் நாம் கூறும் அந்தகாரம் அன்று. அஞ்ஞானிகளுக்கு இரவும் பகலும் ஓயாத ஓரே இரவாகும். இத்தன்மையை "அவன் அருள்" பெற்றோர் கெடுப்பர்: உள்ளத்தில் எழுகின்ற ஞாயிறின் தொழிலாதலால், உள்ளத்திலுள்ள அஞ்ஞானத்தை நீக்கியது நானல்ல, நீயேயெனவும், அத்துறையில் எனதுமுயற்சி யாதொன்றும் இல்லை எனவும் விளக்கு நிமித்தம், பிறவினையின்றித் தன் வினையால் 'கடிந்து' என்றனர் போலும். 'கடிந்து' என்பதற்கு 'அறவே ஒழித்து' என்னும் பொருள் விளங்கும். ஒழிந்த இருள்மீண்டும் தோன்றாதெனவுமாம். இவ்விருள் ஒழித்த திருவருளைத் தாயுமானவர் ஆனந்தக் களிப்பில் செவ்வனே விளக்கக் காண்கின்றோம்.



"அருளால் எவையும் பார்என்றான்-அத்தை
அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்டதல்லால்—கண்ட
என்னையும் கண்டிலேன் என்னடி தோழி! 1
சங்கர சங்கர சம்பு."

"என்னையுந் தன்னையும் வேறு—உள்ளத்
தெண்ணாத வண்ணம் இரண்டற நிற்கச்
சொன்னதுமோ ஒரு சொல்லே ;—அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தைஎன் சொல்வே
சங்கர சங்கர சம்பு." [ன்! 2

"விளையும் சிவானந்த பூமி—அந்த
வெட்டவெளி நண்ணி துட்ட இருளாம்
களையைக் களைந்துபின் பார்த்தேன்—ஐயன்
களையன்றி வேறொன்றும் கண்டிலேன் தோ
சங்கர சங்கர சம்பு." [ழி! 3

"கடிந்து" என்கின்ற இறந்தகால வினை எச்சத்திற்குப் பின்னர் "எழுகின்ற" என்னும் நிகழ்காலப் பெயர் எச்சம் வருவது காண்க. சூரியன் உதயமாவதற்கு முன்னரே, அதாவது அருணோதயத்திலேயே இருள் ஒழிவது நமது அனுபவம் அன்றோ? அவ்வாறே சிவதரிசனத்துக்கு முன்னமே, அவன் அருள் உதிக்கும் காலையிலேயே பாச இருள் அகலுமென்பதற்கு இவ்வெச்சங்களின் காலமுறைகள் மிக அழகாய்ப்பொருந்தி யிருக்கின்றன.

## உள்ளத்து

இனி, "உள்ளம்" என்பது யாது என்று ஆராய்வோம். நமது மானத சாஸ்திரத்தில் கூறியன 35 தத்துவங்களாம். இவையாவும் சாக்கிரதையில் வழங்கும். அவற்றைத் தாயுமானவர் இரண்டு செய்யுட்களில் விளக்குகிறார் :

"சாக்கிரமா துதலினில் இந்திரியம் பத்தும்
சத்தாதி வசனாதி வாயு பத்தும்
நீக்கயில் அந்தக் காணம் புருடனோடு
நின்றது முப்பான் ஐந்து நிலவும் கண்டது
ஆக்கிய சொற்பன மதனில் வாயுபத்தும்
அடுத்தன சத்தாதி வசனாதியாக
நோக்குகாணம் புருடனோடு டனேகூட
நுவல்வர் இருபத்தைந்தாம் நுண்ணியோ
[ரே."

"சுழுத்தி இதையந்தனில் பிராணன் சித்தம்
சொல்லரிய புருடனுடன் மூன்றதாகும்
வழுத்திய நாபியில் துரியம் பிராணனோடு
மன்னு புருடனுங் கூடவயங்காநிற்கும்
அதனிடையேபுருடன்ஒன்றிஅமரும்ஞானம்
பழுத்திடும் பக்குவர்அறிவார் அவஸ்தைஐந்
[தில்
பாங்குபெறக் கருவிநிற்கும் பரிசுதானே"

இவற்றில் அந்தக் கரணங்களின் தொகுதியே, உள்ளமென்று நாம் எண்ணுவதாம். மனமும் உள்ளமே ; புத்தியும் உள்ளமே ; அகங்காரமும் உள்ளமே; சித்தமும் உள்ளமே. இந்த நான்கு அந்தக் கரணங்களில் ஒன்றேனும், இவற்றின் தொகுதிகளேனும், உள்ளமெனக் கூறப்படும். இவ்வந்தக் கரணங்களில் ஒவ்வொன்றும் இருளில் மூழ்கியது.

(1) "மனமோ" குரங்கு எனப்படும்.

"காடுங்கரையும் மனக்குரங்கு கால்விட்டோ
[ட அதன்பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ?"
—தாயுமானவர்.

(2) "சித்தமும்" மலத்தில் மூழ்கியதே சுழுத்தி அவஸ்தையில் மூடத்தன்மையுடன் தயங்கி நிற்பது சித்தமாகும். அது மலமயமான பொருள் என்பதை மணிவாசகப் பெருமான்,

"முத்தி நெறி யறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி யறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்த மலம் அறுவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
அத்த னெனக் கருளியவாறு
ஆர்பெறுவா ரச்சோவே"

என்பதிற் சொல்லியது காண்க.

(3) "புத்தி" இதுவும் அறியாமையின்பாற் பட்டதே. சாதாரணமாக மனிதருக்கு உள்ள புத்தி எல்லாம் பின் புத்தியே. ஏனெனில், மனிதன் ஒரு காலத்தில் கொண்டகொள்கையை மற்றொரு காலத்தில்கொள்கிறானில்லை. அதை, மணிவாசகப் பெருமான் ஆனந்த மாலையில் ஒருவாறு விளக்குகின்றார்,

"என்னால் அறியாப் பதந்தந்தாய், யான்
அது அறியாதே கெட்டேன்
உன்னால் ஒன்றுங் குறைவில்லை, உடையா [ய்
அடிமைக்கு ஆர் என்பேன்
பன்னாளுன்னைப் பணிந்தேத்தும், பழய
அடியாரொடுங் கூடாது
என்னுயகமே பிற்பட்டு இங்கிருந்தேன்
நோய்க்கு விருந்தாயே,"

என மனிதருடைய பின்புத்தி இலக்கணத்தை மணிவாசகப் பெருமான் தன் பேரில் ஏற்றிக் காட்டுகின்றார்.

(4) இனி "அகங்காரமானது" அஞ்ஞான மயம் என்பதற்குத் தாயுமானவர் அருளிய செய்யுள் ஒன்று இவ்விடத்தில் பொருந்தும்,

"நானென்னும் ஓரகந்தை யெவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நானாவாகித் [ச்
தான்வந்து தொடருமித்தால் வளருந்துன்ப
சாகரத்தின் பெருமை யெவர்சாற்றவல்
லார்"

## எழுகின்ற ஞாயிறு

"எழுகின்ற ஞாயிறு" என்று நிகழ்காலத்தில் விளக்கியதின் பயன் என்னை? சூரியன் எழுந்து கொண்டிருக்கும் போதே கண்ணுக்கு இனியவனாயிருக்கிறான். எழுந்த பிறகே கண்ணால் காணக்கூடாத ஒளியுடன் திகழ்வான். அதுபோல ஆத்மஞான உதயத்திலே ஞானிகளுக்கு உண்டாகும் இன்பம் ஞானமுதிர்ச்சியில் உண்டாக்கப்பெறும் இன்பத்தைக் காட்டிலும் குறைவாயிருப்பினும், அஞ்ஞானக் கடலில் ஆழ்ந்த பசுவுக்கு அக்குறைவே பொருத்தமாய் நின்று அனுபவிக்கக் கூடிய இன்பமாய் விளங்கும். எனவே, எழுந்த ஞாயிறுக்கும் எழும் ஞாயிறுக்கும் இடையேயுள்ள "எழுகின்ற" ஞாயிறின் தன்மை ஜீவனுக்கு மிகவும் இனியதாம். "ஞாயிறு" என்ற சொல்லை அங்கு உபயோகித்த காரணம் என்னை? எத்தனையோ சொற்கள் சூரியனைக் குறிப்பனவாயினும், "ஞாயிறு" என்றதில் விசேஷம் என்னை?

"இன்றெனக் கருளி இருள்கடிந்து உள்ளத்
தெழுகின்ற சூரியன் போன்று"

எனலாகாதா?

நமது சமயாசாரியர்கள் மொழிந்த பாசுரங்களில் ஒரு பதத்தை எடுத்துவிட்டு, அதே அர்த்தமுள்ள வேறொரு பதத்தைவைக்க வியலாதென்பது மேலோர் துணிபு. மோனை, எதுகை பேதப்படாது, ஒரே தன்மையதான அசைகள் அமைந்த வேறு சொல்லை நம்சமயகுரவர் சொல்லுக்குப் பதிலாய் வைப்போமாயின், ஒரு பணியிலுள்ள வைரத்தை எடுத்து, அதே அளவுள்ள ஸ்படிகத்தைப் புதைப்பதுபோலாகும். அவ்வாறே, "சூரியன்" என்கிற பதத்தையாகிலும் இன்னும் அப்பொருள் தரும் வேறு எந்த பதத்தையாகிலும் அவ்விடத்தில் வைப்போமாயின், மணிவாசகர் சொற்றொடர் நயம் கெடும். "ஞாயிறு" என்கிற சொல், சூரியனைக் குறிப்பினும், கிழமைகளில் முதலாவதாய் எடுத்துக் காட்டுவது ஞாயிறாதலால், முழுமுதலை உவமானப் படுத்துவதற்கு இப்பதமே பொருந்தும். இதன்றியும் திங்களுக்கு முன் உளதால், "எழுகின்ற ஞாயிறே போன்று நின்ற தன்மை" இறப்பையும் பிறப்பையும் நீக்கும் அமுத கலசத்திற்கு வழிகாட்டும் என்னலாம். ஞாயிறே என்றது ஞாயிறு அருள்வதற்கும் இருள் கடிவதற்கும் மிகவும் வலியதாதலால் வேறு எவ்வொளிக்கும் இவ்வொளி ஒப்பிடலாகாதென்று, ஞாயிறேபோன்று என்றனர்.



## போன்று

"போன்று" என்பது, ஜடப்பொருளாகிய ஞாயிறேஅல்ல: சித்துப் பொருளாயும் இன்பப் பொருளாயும் இருக்கின்ற இது அருள்வதிலும் இருள் கடிவதிலும் ஞாயிறாகும்: இன்பந் தருவதில் மாலை மதியத்தை யொக்கும்: ஆதலால் சில குணங்களிலேயே சூரியன் என்னும் உவமானம் என்று காட்ட, "போன்று" என்னும் சொல் பயன்படுகின்றது.

## நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்

"நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்:—பரம்பொருள் நின்ற தன்மை யாவது,

"வானாகி மண்ணாகி
வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மை
யுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனது
என்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்
சொல்லி வாழ்த்துவனே"

என்றார் திருச்சதகத்தில். அப்பரம்பொருளை நாம் நினைக்கும் நினைப்பாவது எவ்வித இலக்கணம் பொருந்தியதென்றால்,

"நினைப்ப தாக சிந்தை செல்லு
மெல்லை யேய வாக்கினால்
தினைத்த னையு மாவ தில்லை
சொல்ல லாவ கேட்பவே
அனைத் துலகு மாயநின்னை
ஐம் புலன்கள் காண்கிலா
எனைத் தெனைத்த தெப் புறத்த
தெந்தை பாத மெய்தவே."

என்றனர் மற்றோரிடத்தில்.

"நின்ற" என்கிற நிகழ்காலப் பெயரெச்சம் முக்காலத்திலும் நின்றிருக்கும் பெருமான் தன்மையை உணர்த்துவதால், இலக்கண விதிப்படி நிகழ்காலத்தில் காட்டப்பட்டது.

"நின்தன்மை" என்று முன்னிலையில் குறித்தது, அந்தகாரத்தில் மூழ்கிய அடியேன் தன்மைக்கு எதிர்மறையாய் இருப்பதை உணர்த்த என் தன்மை இருளும், உன் தன்மை ஞாயிறும் என பேதப்படுத்தி உணர்த்துவதற்கேயாம்.

"நினைப்பற" என்றது, பிறப்புக்கு இடமாயுள்ள மறப்பு நினைப்பு என்னும் அவஸ்தைகளில் மனச்சேட்டையால் உற்பத்தியாவது சிவானுபவத்தைப் பெருக்கலாகாதென்றும் இடைவிடாத் தியானமே ஞான சம்பந்தமான நினைப் பென்றும் காட்ட, "நினைப்பு அற நினைந்தேன்" என்றார். இது அஞ்ஞானமான நினைப்பு அல்லவென்று குறிப்பதற்கேயாம். சலனமற்று ஒரே தன்மையதாய் நிற்கும் நிலையே "நினைப்பற நின்றேன்!' என்றும் "வேறு சிந்தனையின்றி நினைந்தேன்" என்றும் பொருள் தரும் இத்தகைய நினைப்பில் உள்ளவர்க்கு வேறு நினைப்பு வருமோ எனின், வருவதற்கு இடமில்லை என்பதை விளக்கவே, பின் வரும் சொற்றொடராகிய" "நீயலால் பிறிது மற்றின்மை" என்னும் தத்துவத்தை வெளியிடுகின்றார்.

## நீயலால் பிறிது மற்றின்மை

'நீயலால் பிறிது மற்றின்மை' என்ற இச்சொற்றொடரானது சமயவாதிகளு

க்கு மிகுந்த போராட்டம் கொடுத்த தாம். கேவலாத்துவை திகள்முடிவெனக் கொள்ளும் ஏகான்ம நிலையா? அல்லது சைவசித்தாந்தக் கொள்கையா? என்பது இன்னும் நடக்கும் வாதமாகும்.

"பிறிது மற்றின்மை" என்பதால் வேறு பொருள் இல்லை என்பர் சங்கர வாதத்தார். பாசம் இன்றென்பதும், பதியும் பசுவும் ஒன்றென்பதும், உபாதி பேதம் நீங்கலாக ஆன்மா ஒன்றேயாம் என்பதும் அவர் கொள்கை. அதற்காகவே இப்பாசுரத்தை மேற்கோளாக இழை எடுத்து வலிவாக வற்புறுத்துவர். ஆயினும் இந்நிலையை ஆராயுங்கால், திருமூலர் கூறுகிறார்,

"மாத்தை மறைத்தது மாமதயானை;
மாத்தில் மறைந்தது மாமதயானை;
பாத்தை மறைத்தது பார்முதல் பூதம்;
பாத்தில் மறைந்தது பார்முதல் பூதம்."

ஒரு மாயானையில் நமக்கு மரம் என்னும் நோக்கம் உள்ளபோது யானையின் உருவம் திகழாது. யானை என்கின்ற பாவனை வந்தவிடத்து மரம் என்னும் நினைவு மழுங்கிவிடும். அதுபோலவே உலகத்தில் பஞ்சபூத அமைப்பான பல பொருள்களைப் பேதவுணர்வுடன் காணும்போது கடவுள் உணர்ச்சி நமக்கு முற்றும் இல்லை. கடவுள் உணர்ச்சியில் முதிர்ந்த நமது சயமகுரவர்களுக்கு உலகமுழுவதும் கடவுள் மயமாகக் காணப்படும். அறிவின் ஆராய்ச்சியே அந்தத்தில் இந்நிலைக்குக்கொண்டு போவதால் தாயுமானவர் மொழிந்தவாறு:—

—"அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள் கண்டதல்லால்—கண்ட
என்னையும் கண்டிலேன் என்னடி தோழி
சங்கா சங்கா சம்பு"

என்றவிடத்து, "நீயலால் பிறிதுமற்றில்லை" என்றே கூறவேண்டும். அதை விட்டு நடலை வாழ்வில் கட்டுப்பட்ட இந்நிலையிலிருந்து "நீயலால் பிறிது மற்று இல்லை" என்பது வெற்றுரையாகும்.

"சின்மாத் திரமாயுள்ள வெறுஞ் சிவனே
திகழ்வான் யாதுக்கும்
முன்மாத் திரம் வேறில்லை
முற்றும் அவனே"

என்பது அறிவியல்நூல் ஆராய்ச்சிமுடிவேயாம். இவ்வாராய்ச்சி இப்பாசுரத்தின் பிற்பாதியில் விளங்கும். அதாவது:

"சென்றுசென் றணுவாய்த்
தேய்ந்து தேய்ந்தொன்றாம்
திருப் பெருந்துறையுறை
சிவனேஒன்று நீயல்லை
அன்றி ஒன்றில்லை"

என்னும் தன்மை. இத்தன்மை சிற்றறிவு பெற்ற மானிடருக்கு விளங்கக் கூடாத தன்மையேயாம். ஆயினும் ஒருவாறு விளக்கிக் காட்டும் நிமித்தம் இயற்கைத் தத்துவ நூல் முறையில் மணிவாசகப் பெருமான் விளக்குகின்றார்,

"சென்று சென்றணு வாய்த்
தேய்ந்து தேய்ந் தொன்றாம்"

ஒருபொருளைநாடி நமதுமனோசக்தியால் ஊடுருவிச் செல்லுவோமாகில், அது முதலில் ஸ்தூல அணுக்களாய் உடையும். ஒவ்வொரு ஸ்தூல அணுவையும் பெரும்பொருளெனப் பாவித்து அதை உடைத்தால் சூக்ஷ்ம அணுக்களாய்ப் பிரியும். ஒவ்வொரு சூக்ஷ்ம அணுவும் தற்கால ஆராய்ச்சியில் ஒரு சூரியமண்டலம் போல் இடையே இயக்க மற்ற ஆண் தன்மையுடைய சூரியன் போன்ற ஒரு பரமாணுவையும் அதைச் சுற்றிப் பற்பல கிரகங்கள் போல் ஓடும்



பெண் தன்மையுடைய பரமாணுக்களையும் அவற்றின் மண்டலங்களையும் ஆட்சியையும் உடையதாய்க் காணப்படுகின்றது. இத்தகைய பரமாணுவில் ஒன்று, தனது இடம் அல்லது கோளத்தைவிட்டு நீங்குமாறு நேரிடுமாயின், அவற்றினின்று வீசும் சக்தியானது அளவிறந்ததாய் வலிய மனிதரையும் வீழ்த்தக் கூடியதாய் இருக்கின்றதென (X - Rays) ஆங்கிலேய இயற்கைத் தத்துவ சாஸ்திரிகள் விளக்குகின்றனர். இத்தத்துவத்தை மணிவாசகப் பெருமானும் திருஅண்டப் பகுதியில் விளக்குகின்றார். இவ்வாசிரியப்பாவானது ஸ்தூல சூக்ஷ்மத்தைத் தில்லையில் வியந்து பாடியதாகும். மகத்துக்குமகத்தாய் விளங்கும் அண்ட சராசரத்தை அணுவுக்கு அணுவில் ஆராயும் போதும் யாதொரு குணபேதமுமின்றி அது நிற்பதை நமது சமயகுரவர் உள்ளங்கை நெல்லிக்கனி எனக் காட்டுகின்றார்.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின் [யும்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதி
—தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய."

இவ்வாசிரியப் பாவான்து,

"பிரமன் மாலறியாப் பெற்றி யோனே"

என்று முடிவது காண்க.

**திருப்பெருந்துறை யுறை சிவனே**

"திருப் பெருந்துறையுறைசிவனே" என்றதில் ஒரு விசேஷம் உண்டு. உத்தரகோசைமங்கை* ஈசனே என்று சொல்லாமலும், வேறு எவ்வூரையும் கூறாமலும் திருப்பெருந்துறை யுறை சிவனே என்றது ஏன்?

துன்பக்கடலைக்கடப்பதற்குத் துறைமுகமாய் உள்ளதில் பெருந்துறையாய் உறைபவன் என்பர். இதன்றியுந்தான் உபதேசம் பெற்ற தலமாதலால் அதைக் குறித்தனர் போலும். "சிவனே" என்று அழைப்பானேன்? வேறு திருநாமத்தால் அழைக்கலாகாதா? இதற்கு விடை திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் காண்க.

"சிவனெனும் நாமந் தனக்கேயுடைய
செம்மேனி யெம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு
மாகில் அவன்றனையான்
பவனெனு நாமம்பிடித்துத் திரிந்து
பன்னாள் அழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழி
யானென்றெ திர்ப்படுமே."

—அப்பர்.

"சிவன்" என்கிற நாமமானது பின்னு கனையே குறிக்குமன்றி ஏனையோரைக் குறியாது. மற்ற நாமங்கள் அவ்வாறல்ல. "பெருமாள்", "வரதன்" என்பவை சிவனையும் குறிக்கும்; திருமாலையும் குறிக்கும். வேறு ஈசுவரன் என்னும் பொருள்தரும் சொற்களை வேறு கடவுள்களுக்கும் அமைப்பது வழக்கம். அதனால் சிறப்புப் பெயராய் அமையும் இன்ப மென்னும்

---

*"தாதாடு பூஞ்சோலைத்
தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்
பதியேன்-கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேல்
சிவ புரம் போற் கொண்டாடும்
உத்தரகோ சமங்கை
ஊர்"

பொருள் தரும் "சிவன்" என்னும் பெயரையே இங்கு மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளினார்.

### ஒன்று நீயல்லை

"ஒன்று நீயல்லை" உலகத்தில் எப்பொருளை எடுத்துக் காட்டினும் அது நீ யென்னலாகாது. உயிருள்ள பொருளாகிலும் சரி, உயிரற்ற பொருளாகிலும் சரி அது சிவனாகாது. அண்ட சராசரங்கள் அத்தனையும் அவ்வாறே. ஆனால் அவனை நீங்கலாக எப்பொருளும் நிலையா. எவ்வுயிர்க்கும் அவன் உயிராயிருப்பதால் பேருயிர் நீங்குமாயின், சிற்றுயிர் சிதையும்.

பிரளய காலத்தில் இவ்வாறே பஞ்ச பூதங்களும் நசிப்பதை அறிக:—

" வான்கெட்டு மாருதமாய்ந்து
அழல் நீர் மண்கெடினும்
தான்கெட்டலின்றிச்
சலிப்பறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு
உணர்வுகெட்டு உள்ளமும்போய்
நான்கெட்டவா பாடி
தெள்ளேணம் கொட்டாமோ "

இத்தன்மையை யார் அறிவார்? அல்லது மனோவாக்குக்கு எட்டாத இந்நிலையை சிற்றறிவு உடைய மாந்தர் எவ்வாறு அறியக்கூடும். என்பதற்கே, " யார் உன்னை அறியகிற்பார்?" என்று மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளினார்.

### முடிவுரை— Conclusion

ஆதலால் " அவனருளால் அவன் தாள் வணங்கி " அவன் காட்ட அறிந்தாலன்றி வேறு வகையால் அவனை அறியவொண்ணாது என்னும் உண்மையை இப்பாசுரம் விளக்குவது கண்டோம்.


## திருக்குறள் விளக்கம்

இந்நூற்கண் திருவள்ளுவர் திருக்குறள் மூலமும், பரிமேலழகர் உரையும், விளக்கமும் சேர்ந்திருக்கின்றன. இவ்விளக்கவுரை, ஆசிரியர் மாணாக்கர்க்கு அறிவுறுத்துவது போல வரையப் பட்டிருக்கிறது. திருக்குறள் பயில்வோர்க்கு இப்பதிப்பு பெருந்துணை செய்யுமென்பதில் ஐயமில்லை. நல்ல காகிதத்தில் அழகுபெற அச்சிடப்பட்டுளது.

| | | | | |
|---|---|---|---|---|
| அறத்துப்பால் காலிகோ பையிண்டு விலை ரூபா | | 3 | 4 | 0 |
| பொருட்பால் | ,, | 4 | 8 | 0 |
| காமத்துப்பால் | ,, | 1 | 12 | 0 |

பண்டிதர் - கி. குப்புச்சாமி முதலியார்,

3/2, பிள்ளையார்கோயில் தெரு, கிருஷ்ணாம்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

## முருகன் திருவருட்பா

வடலூர் - இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்தது; திருவருட்பாவில் ஐந்தாந் திருமுறையாகத் திகழ்வது. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பேறு குறித்துத் திருத்தணிகையில் முருகப் பெருமான் முன்னிலையில் " அமுத அழுகை " இந்நூலில் தேங்கி வழிகிறது. " முருகன் திருவருட்பா " கருங்கல் மனதையுங் கரைத்துக் கரைத்து இளகச் செய்யும். திருவருட்பேற்றில் காதல் எழுப்பும். அதை ஒருகால் ஓதுவோரும் அன்பராதல் ஒருதலை.

விலை அணா 8.

முருகவேள் புத்தகசாலை,
இராயப்பேட்டை, சென்னை.


சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்

# இருபத்தைந்தாம் ஆண்டுவிழா

மகிபாலன்பட்டி - பண்டிதமணி

சைவத்திருவாளர் - மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்

# தலைமைப்பேருரை

திருச்சிற்றம்பலம்

ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகிலளவில்லை கிளக்க வேண்டா
கோட்பாலன வும்வினையுங் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்கதக்கார்.

திருச்சிற்றம்பலம்

அன்புமிக்க சகோதரர்களே!

சகோதரிகளே!

எல்லாம் வல்ல பரங்கருணைத் தடங் கடலாகிய சிவபெருமான் திருவருட் பாங்கால், இற்றைக்கு இருபத்தைந்து யாண்டுகளுக்குமுன் தோன்றி, இதுகாறும் சைவ உலகிற்குப் பல்லாற்றானும் நற்பயன் விளைத்துவரும் இச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் கால் நூற்றாண்டு நிறைவுவிழா நிமித்தம் இங்குக் கூடிய இம்மாபேரவையில், பேரறிஞர்களாகிய உங்கள் முன்னிலையில் "தலைமை தாங்குக" என்று இச் சமாஜத்தன்பர்கள் "வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைக்கு" யான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன். இதுபற்றி என் நன்றியறிவையும் வணக்கத்தையும் இம்மகா சமாஜத்தார்க் குரிமைப் படுத்துகின்றேன். சித்த விருத்தி முதலிய காரணங்கள் யாதுமில்லாத கல்லுருவில், தூய உள்ளமுடைய பெரியார் தெய்வ பாவனையைச் செய்ய, அத்தெய்வம் அவ்வுருவிற்றங்கிப் பயன் விளைத்தலைக் கண்கூடாகக் காண்கின்றோம். அங்ஙனமாயின், அறிவாற்றல் நிறைந்த உங்கள் தூய எண்ணங்களெல்லாம் கருவி காரணங்களோடுங் கூடிய சிறியேற்குத் தலைவனாந் தகுதி அமைகவென நிகழுமாயின், ஏன் அமையாது? இவ்வுறுதி கடைப்பிடித்தே இப்பணியிற் றலைப் படலானேன்.

### இக்காலத்துச் சமயநிலை

அன்பர்களே! தற்கால உலக நிகழ்ச்சி சமய நிலையிற் பெரிதும் பிறழ்ச்சி யடைந்து வருகின்றது. இந்நிலையிற் பண்டைப் பெரியோர் வகுத்த சமய வுணர்வொழுக்கங்களில் காலநிலை கருதி வேண்டுவன இன்ன, வேண்டாதன இன்னவென ஆராய்ந்து கோடல் நன்றென்று பல அறிவுடையோர் கருதுகின்றனர். அக் கருத்து ஏற்றுக் கொள்ளத் தக்கதெனினும், பழையன கழிதற்கும் புதியன புகுதற்கும் உரிய தீங்கு நலங்களை யன்றி நிறுத்துணர்தலாகிய பொறுப்பு, ஒவ்வோர் அறி

ஞர்க்கும் இன்றியமையாத தாகும்.
இப்பொறுப்பைக் காய்தல் உவத்த
லின்றி நடுவு நிலையை மேற்கொண்டும்
முன்னைப் பெரியார்பால் நன்கு மதிப்
பை நழுவவிடாமலும் தாங்கல் வேண்
டும். இக்கால உலகம் பழைய உண்மை
களாகிய உருவைப் புதிய ஆராய்ச்சி
யென்னும் எழில் மிக்க அணிகலன்
களாற் புனைந்து வெளிப்படுத்துதலை
எதிர்பார்த்து நிற்கின்றது. இவ்வேட்
கைநிலை யுணர்ந்து இச்செயன் மேற்
கொள்ள முற்பட்டாருட் சிலர் தங்
கற்பனையாற் காணும் அணிகலன்
களுக்கு அவ்வுண்மையுரு இயையாமை
கண்டு அவ்வுருவையே களைந்துவிட
எண்ணுகின்றனர். இவ் வெண்ணம்
மிகத் தீங்கு பயப்பதாகும். நம் பண்
டைய உண்மைக் கொள்கைகளை மாசு
படச் செய்து அவற்றின் சிறந்த
பயன்களை நாம் துய்க்க வொட்டாது
இடையூறு விளைத்துவரும் களைகளைக்
களையவேண்டு மென்னும் எண்ணம்
சிறந்ததே. அம்முயற்சியிற் றலைப்பட்ட
நம்சகோதரருட்சிலர் அக்களைகளோடு
பன்னாட் பயின்ற பிழைநோக்கி நற்கதி
விளைக்கும் நஞ் செந்நெறிப் பயிரையும்
உடன்களைந் தெறிந்துவிட்டு, "யாது
ப்பயனும் வேண்டாம். உண்டியும் உறக்
கமுமே வேண்டுவன" வென்று மக்
கள் வாழ்க்கைக்கு ஒவ்வா நிலையை
மேற்கோடல் மிகவும் வருந்தத் தக்
கதே.

## வாழ்க்கையின் நோக்கங்கள்

இனி மக்கட்டம் வாழ்க்கையின் நோக்
கங்கள்தாம்யாவை? அந்நோக்கங்களை
நிறைவேற்றிக் கோடற்குரிய நெறிகள்
எவை? அவற்றாலாம் பயன்களென்னை?
என்று இன்னோரன்ன ஆராய்ச்சியிற்
றலைப்படல் அறிவுடையார் யாவர்க்
கும் உரிய முதற்கடமையாகும். நம்
வாழ்க்கையின் நோக்கமாக 'யோசிக்
கும் வேளையிற் பசிதீர உண்பதும்
உறங்குவதுமாக முடியும்' என்று நம்
பெரியாரொருவர் உலகஞ் செல்லும்
கீழ்நிலை நோக்கி இரங்கிக் கூறிய பரி

வுரையை, அக்கருத்துணராமற் கடைப்
பிடிப்பேமென்பார் செயல் மிகவும்
இழிந்த தொன்றாகும். பசிதீர உண்
டலும், வேட்கை தீரக்காமவின்பம்
துய்த்தலும் நம்மினுமிழிந்த பிறப்பின
வாகிய புள் விலங்கு முதலியவற்றிற்
கும் குறைவறக்கிடைத்தலான், பகுப்
புணர்வினாற் சிறந்த மக்கட் பகுதியி
னர்க்கு அச்செயல்களால் அவற்றி
னும் விழுமிய பெருமை யாதுளது?
இறைவன் நமக்கு மனவுணர்வையும்
நூலுணர்வையும் சிறப்பாக அமைதர
உதவியதன் நோக்கம்தான் யாதோ?
அவ்வுணர்வு பெற்றதனால் நம் நோக்
கம் அதற்குத்தக விழுமியதாக இருத்
தல் வேண்டுமன்றோ? அந்நோக்கம்
தான் அறநிலையிற் பல திறப்பட்டுச்
சமயநிலையில் ஒன்றாகவே முடியுமென்
பதை நம்பெரியார் ஒழுகலாற்றானும்,
அருண் மொழிகளானும் உணரலாம்.

## இல்லற நோக்கம்

ஒரு மணமகளை ஓராடவன் காதற்
கிழமைகொடு மணந்து நடாத்தும் இல்
வாழ்க்கையைப் பெரியார் இல்லற
மென்று சுட்டியதன் கருத்தை ஊன்றி
நோக்கல் வேண்டும். இல்லின்பம்
என்னும் வழக்குப் பொருந்துவதாக
வும், இல்லறமென்னும் வழக்கேஆட்சி
யிற் பெரிதும் காணப்படுகின்றது.
அவ்விருவரும் துய்க்கு மின்பம், அவர்
தம் அன்பின் தொடர்பை வேரூன்
றச் செய்து, பின் அவ்வன்பொருங்
கியைந்த அருங்கலமாக அவர் பால்
வெளிப்படூஉம் மகவு முதலியோர்
மாட்டுஅதனை விரிவுபடுத்திப்பின்னர்ப்
படிப்படியாக உலகத்துள்ள எல்லா
வுயிர்களிடத்தும் அவ்வன்பைப் பர
வச் செய்து அருள் என்னும் பெயா
தாக்கி அதன் முகமாக அவ்வருளேயே
வடிவமாக வுடைய இறைவனோடு
இயைவித்துப் பேரின்ப நுகர்ச்சியிற்
றலைப்படுத்தும் அறமாக மாறுதலின்,
இல்லின்ப மென்பதனினும் இல்லற
மென்னும் ஆட்சி சிறந்ததெனப்
பெரியார் கண்டனர்போலும். கற்



புக் கடம்பூண்ட தெய்வமெனப்
பாராட்டப்பெற்ற வீரபத்தினியாகிய
கண்ணகியென்னும் பெண்மணி,--இள
மையும் எழிலுமிக்க தன் காதற்கொழு
நனாகிய கோவலன், கணிகை யொருத்
தியின் வயப்பட்டு, அவள் உடனுறை
வால் தன்இளமைப் பயனைப் பிறழ்ச்சி
முறையில் நுகர்ந்து, பொருளற்ற நிலை
யில் தன்பாற்போந்து, "பொன்னே
மணியே புனைபூம் பாவாய், காதல்
கெழீஇய கற்பரசியாகிய நின்னைவிட்டு
வேறொருத்திபால் என் இளமையைக்
கொன்னே கழித்தேன்! என்னே நின்
பொறுமை! இருமுது குரவர் ஏவ
லும் பிழைத்தேன், சிறு முதுக்குறை
விக்குச் சிறுமையுஞ் செய்தேன், வழு
வெனும் பாரேன், மாநகர் மருங்கீண்
டெழுகென வெழுந்தா யென்செய்
தனை "யென வியந்து இரங்கிக் கூறுங்
கால், தன் காதலனும் அவன் பிரி
வால் 'பொறையிலா அறிவு போகப்
புணர்விலா இளமை' யென இளமை
யின் பயனாகக் கூறப்பட்ட காமவின்
பம் துய்த்தற்கு இயைந்திலதே! என்
பருவம் வறிதே கழிந்ததே! என்று
அவ்வின்பமெய்தாமை குறித்து வருந்
தினாளல்லள். பின்னை அவ்வறப்
பெருஞ்செல்வி, "அறவோர்க் களித்
தலும் அந்தண ரோம்பலும், துற
வோர்க் கெதிர்தலும் தொல்லோர்
சிறப்பின், விருந் தெதிர் கோடலும்
இழந்த வென்னை" யெனத் தம்
இல் வாழ்க்கையின் உண்மைப் பெரு
நோக்கங்களையே இனிதெடுத் துரை
த்து, அவை அவன் பிரிவாற் கை
கூடப் பெறாமைபற்றி இரக்கமுற்றாள்
என்பதைத் தமிழ்ப் பெருங் காப்பிய
மாகிய சிலப்பதிகாரத்தா லுணர்கின்
றேம். இதனாலும் இல்லறமென்னும்
பெயரும், அதன் நோக்கமும் இத்தன்
மைய வென வெளிப்பட்டன. இந்
நோக்கம் அறநிலை பற்றியதாகும்.

## சமய வாழ்க்கையின் நோக்கம்

இங்ஙனமே சமயநிலையில் நம்வாழ்க்
கைச் செயல்களெல்லாம் இன்ப வடி

வினனாகிய இறைவனைப் பற்றியே
நிகழ்தல் வேண்டும். நம் உடலுறுப்
புக்களெல்லாம் அப்பெருமானை வழி
படற்கே யமைந்தன வென்பதை
"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்
சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலை
வனை" யென்னுந் தமிழ் மறையானும்
உணர்ந்துளேம். நம் நாட்செயலனைத்
தும் அப்பெருமான் நினைவே முன்
னிற்கச் செய்தல் வேண்டுமென்னும்
ஆன்றோராசாரம் எத்துணை நலமுடை
யது? நம்வாழ்க்கை மலர் தெய்வமணங்
கமழுமேல் சிறந்ததாகப் பாராட்
டப்படும். அந் நன்மண மின்றேல்
'பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப்
பணியாதே' யென்றருளியாங்குப் பய
னற்றதாக முடியும்.

## மகா கவிகளின் உள்ளக்கிடக்கை

நம் புலமையும் அறிவும் கவிச்
சுவையி லீடுபடுங்கால், இன்பம் அவ
லம் முதலியனவாகத் தோன்றி முடி
வில் அச்சுவை யனைத்தும் தெய்வநறுங்
கனித் தீஞ்சாற்றில் தோய்ந்தனவா
கவே புலப்படுவனவாம். இவ்வுண்மை
யைப் பெரும்புலமை வாய்ந்த அருங்
கவிகளினெண்ணங்களே வெளிப்படுத்
துவனவாம். தெய்வ மணக்கும் செய்
யுள் யாக்கும் திறம் பெரிதுடைய நம்
சேக்கிழார் பெருமான், இன்பச் சுவை
யை இனிது விளக்கும் செய்யுட்களி
லும் தம் உண்மைநோக்கமாகிய தெய்வ
மணங் கமழவே கூறுவர். 'வழுக்கி
வீழினுந் திருப்பெயரல்லான், மற்று
நானறியேன் மறுமாற்றம்' என்பது
அநுபவ அருளுரை யன்றோ? எழில்
நலமும் தெய்வ நலமும் நிரம்பப்
பெற்ற பரவையாரைச் சுந்தரமூர்த்தி
கள் திருக்கோயிலிற் கண்ட காட்சி
யை எடுத்துரைக்கு முகமாகச் செந்
தமிழ்க்குச் சிறப்பளித்து நிற்கும் இன்
பத்துறைபற்றி யெழுந்த செய்யுட்
களைக் காண்மின்கள்! பரவையாரைக்
குறித்துக் "கற்பகத்தின் பூங்கொம்போ
காமன்றன் பெருவாழ்வோ பொற்
புடைய புண்ணியத்தின் [illegible]ணியமோ

RK73M121,M24
M13141.
187180

பேரின்ப நுகர்ச்சியிற் றலைப்படுத்தும் இயனல மமைந்தது சிவநெறி யாகிய சைவ சமயமே யாகும்.

## முப்பொருள்களின் இயல்பு முண்மையும்

முதலாவது இச்சமயநெறிக்கட் புகுவாரொருவன் தன்னை நோக்கி, 'நான் யார்? எனக்கு இவ்வுடல் வந்தவாறென்? இவ்வுடற்கும் எனக்கும் உள்ள இயைபு யாது?' என்று இவ்வளவில் நின்று ஆராயத் தொடங்குவன். இத்தொடக்கத்தில் இவ்வுடலை யல்லாமற் காட்சி யளவையில் வேறொன்றுங் காணப்படாமையானும், இதற்கு ஓர் ஊறுபாடுண்டாயின் எனக்குத் துன்பமுண்டாகின்ற தாகலானும் தோல் என்பு நரம்பு முதலியவற்றாலாகிய இவ்வுடலே யானாக இருக்கலாம் என்னும் நினைவு தோன்றப், பின்னர் உயிருடன் கூடியிருக்குங்கால் உற்றதை யுணரும் இவ்வுடல் அவ்வுயிர் நீங்கிய வழித் 'தடிந்தெரி யூட்டினுந் தானுணராதாகலான், உடம்பிடைப் போனதொன்றுண்டென்னும் உணர்ச்சி' தோன்றும். அங்ஙனம் உடலினின்று நீங்கியதே அறிவுருவாகிய உயிராகுமெனவும், இவ்வுடம்பு மண் நீர் வளி தீ காற்று முதலிய பூதங்களின் சேர்க்கையாலாகிய அறிவில் பொருளாதலின், இஃது அறிவுருவாகிய உயிராகாதெனவும், காட்சியொன்றனே யெப்பொருளையும் அறிதலியாதெனவும், கருதலளவையும் உரையளவையும் பொருட்டுணிவிற் கின்றியமையாதன வெனவும் முறையே உணர்வுதிக்கும், இவ்வுண்மையையே பட்டினத்தடிகளென்னும் சிவஞானச் செல்வர்,

"மேவிய புன்மயிர்த் தொகையோ வம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
யூறு முதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கு மெலும்போ எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்
தள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின்
றூரும் புழுவி னொழுங்கோ நீரிடை' [ன்
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ வுடம்பிற்குட்
பிரியா தொறுக்கும் பிணியோ தெரியா
தின்னதி யானென் றறியே னென்னை
யெங்குந் தேடினேன் யாதினுங் காணேன்"

................ ..............

"மங்கை பங்க கங்கைநா யகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்ட
என்னையுங் கண்டேன்" [லும்

என்னும் செய்யுட் பகுதியில் நன்கு விளங்கக் கூறினர்.

இதனால், இத் தத்துவதாத்துவிகங்களெல்லாம் சடப் பொருளாக, இவையானல்லேன் எனக் களைந்து ஆராயுமறிவுடைப் பொருளொன்று நம்முடம்பின் வேறாக வுண்டென்பதும், அதுவே இறைவன் அறிவித்தால் அறியும் இயல்பினதாகிய உயிரென்பதும் போதரும். இவ்வுயிரினிலக்கணம் பலவாயினும், ஈது எப்பொருளைச் சார்கின்றதோ அப்பொருளின் தன்மையே தன் தன்மையாக் கொள்ளும் இயல்பு நோக்கி இதனைச் சார்ந்ததன் வண்ணமாந் தன்மையுடையதெனப் பெரியார் விதந்து கூறுப. இவ்விலக்கணம் மிக நுணுகி யுணர்ந்த தொன்றாகும்.

பளிங்கொன்று தன்னையடுத்த நிறம் யாதாயினும் அந்நிறமே தன்னிறமாகக் கொள்ளு மியல்பினது. அதுபோலவே இவ்வுயிரும் எவ்வெப் பொருளைச் சார்கின்றதோ அவ்வப் பொருண்மய மாகவே தோன்றும். இஃது அறிவித்தாலறியு மியல்பினது. இஃதிங்ஙனமாக, உலகத்துள்ள செயற்கைப் பொருள் ஒவ்வொன்றினையும் நோக்கி அதனதன் செயற் பாட்டிற்குச் செய்பவனையுங் கண்கூடாகக் கண்டு வருகின்றேம். இந்நிலையில் அதி விசித்திரமான இவ்வுலகின் ஆக்கப்பாட்டிற்குப் போற்றலும் போறிவுமுள்ள, இறைவனொரு



புக் கடம்பூண்ட தெய்வமெனப் பாராட்டப்பெற்ற வீரபத்தினியாகிய கண்ணகியென்னும் பெண்மணி,--இளமையும் எழிலுமிக்க தன் காதற்கொழுநனாகிய கோவலன், கணிகை யொருத்தியின் வயப்பட்டு, அவள் உடனுறைவால் தன்இளமைப் பயனைப் பிறழ்ச்சி முறையில் நுகர்ந்து, பொருளற்ற நிலையில் தன்பாற்போந்து, "பொன்னே மணியே புனைபூம் பாவாய், காதல் கெழீஇய கற்பரசியாகிய நின்னைவிட்டு வேறொருத்தியால் என் இளமையைக் கொன்னே கழித்தேன்! என்னே நின் பொறுமை! இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன், சிறு முதுக்குறைவிக்குச் சிறுமையுஞ் செய்தேன், வழுவெனும் பாரேன், மாநகர் மருங்கீண்டெழுகென வெழுந்தா யென்செய்தனை "யென வியந்து இரங்கிக் கூறுங்கால், தன் காதலனும் அவன் பிரிவால் 'பொறையிலா அறிவு போகப் புணர்விலா இளமை' யென இளமையின் பயனாகக் கூறப்பட்ட காமவின்பம் துய்த்தற்கு இயைந்திலதே! என்புருவம் வறிதே கழிந்ததே! என்று அவ்வின்பமெய்தாமை குறித்து வருந்தினாளல்லள். பின்னை அவ்வறப் பெருஞ்செல்வி, "அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும், துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின், விருந் தெதிர் கோடலும் இழந்த வென்னை" யென்த் தம் இல் வாழ்க்கையின் உண்மைப் பெருநோக்கங்களையே இனிதெடுத் துரைத்து, அவை அவன் பிரிவாற் கைகூடப் பெறுமைபற்றி இரக்கமுற்றுள் என்பதைத் தமிழ்ப் பெருங் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தா லுணர்கின்றேம். இதனாலும் இல்லறமென்னும் பெயரும், அதன் நோக்கமும் இத்தன்மைய வென வெளிப்பட்டன. இந்நோக்கம் அறநிலை பற்றியதாகும்.

## சமய வாழ்க்கையின் நோக்கம்

இங்ஙனமே சமயநிலையில் நம்வாழ்க்கைச் செயல்களெல்லாம் இன்ப வடிவினனாகிய இறைவனைப் பற்றியே நிகழ்தல் வேண்டும். நம் உடலுறுப்புக்களெல்லாம் அப்பெருமானை வழிபடற்கே யமைந்தன வென்பதை "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனை" யென்னுந் தமிழ் மறையானும் உணர்ந்துளோம். நம் நாட்செயலனைத்தும் அப்பெருமான் நினைவே முன்னிற்கச் செய்தல் வேண்டுமென்னும் ஆன்றோராசாரம் எத்துணை நலமுடையது? நம்வாழ்க்கை மலர் தெய்வமணங் கமழுமேல் சிறந்ததாகப் பாராட்டப்படும். அந் நன்மண மின்றேல் 'பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே' யென்றருளியாங்குப் பயனற்றதாக முடியும்.

## மகா கவிகளின் உள்ளக்கிடக்கை

நம் புலமையும் அறிவும் கவிச்சுவையி லீடுபடுங்கால், இன்பம் அவலம் முதலியனவாகத் தோன்றி முடிவில் அச்சுவை யனைத்தும் தெய்வநறுங் கனித் தீஞ்சாற்றில் தோய்ந்தனவாகவே புலப்படுவனவாம். இவ்வுண்மையைப் பெரும்புலமை வாய்ந்த அருங்கவிகளின்எண்ணங்களே வெளிப்படுத்துவனவாம். தெய்வ மணக்கும் செய்யுள் யாக்கும் திறம் பெரிதுடைய நம் சேக்கிழார் பெருமான், இன்பச் சுவையை இனிது விளக்கும் செய்யுட்களினும் தம் உண்மைநோக்கமாகிய தெய்வமணங் கமழவே கூறுவர். 'வழுக்கி வீழினுந் திருப்பெயரல்லான், மற்று நானறியேன் மறுமாற்றம்' என்பது அநுபவ அருளுரை யன்றோ? எழில் நலமும் தெய்வ நலமும் நிரம்பப் பெற்ற பரவையாரைச் சுந்தரமூர்த்திகள் திருக்கோயிலிற் கண்ட காட்சியை எடுத்துரைக்கு முகமாகச் செந்தமிழ்க்குச் சிறப்பளித்து நிற்கும் இன்பத்துறைபற்றி யெழுந்த செய்யுட்களைக் காண்மின்கள்! பரவையாரைக் குறித்துக் "கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ,

JL
R673m2",1128
N31141.
187150

புயல்சுமந்து, விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ, அற்புதமோ சிவனருளோ அறியேனென் றதிசயித்தார்' என்று சுந்தரமூர்த்திகள் கொண்ட திருவுள்ளக் கருத்தும், அவ்வடிகளைக் குறித்து, "முன்னேவந்தெதிர்தோன்றும் முருகனோ பெருகொளியாற், றன்னேரின் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ, மின்னேர் செஞ் சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ, என்னேயென் மனந்திரித்த இவன்யாரோ எனநினைந்தார்" என்று பரவையார் கொண்ட திருவுள்ளக்கருத்தும் இயைந்த அழகுதான் என்னே! என்னே!

இச்செய்யுட்களின் முடிவில், 'சிவனருளோ' வெனவும், 'மின்னேர் செஞ்சடை யண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ' எனவும் போந்த இயைபு அருட்பெரும் புலவராகிய அடிகள் புலமை நோக்கத்தைத் தெற்றெனப் புலப்படுத்தும். ஓகாரங்களால் ஐயுற்று விலக்கப்பட்ட உவமைகளினியைபையும் சிந்தித்துப் பார்மின்கள். 'கற்பகத்தின் பூங்கொம்போ' என்னும் அடிகள் உரையில் கற்பகத்தருவில் இந்திரனால் வளர்க்கப்பட்ட பூங்கொம்பு போல்வாளாகிய தெய்வயானையோ வென்னுங் குறிப்புத் தோன்ற, அம்மையார் "முன்னேவந்தெதிர்தோன்றும்முருகனோ"வென்றார் எனவும், அடிகள் "காமன்றன் பெருவாழ்வோ" வென, அம்மையார் "தன்னேரின் மாரனோ" என்றாரெனவும், அடிகள் "புண்ணியத்தின் புண்ணியமோ" என, அம்மையார் அதன் நுகர்ச்சி மிக்க "தார்மார்பின் விஞ்சையனோ" என்றாரெனவும், முடிவில் அடிகள் "சிவனருளோ" வென, அம்மையார் "மெய்யருள் பெற்றுடையவனோ" என்றாரெனவுங் கூறிய கருத்தியைபுகள் நம்மனத்தை மிகவும் கனிவிக்கின்றன. பின்னர்ப் பரவையார் சற்று மறைந்தவுடன் அவர் பிரிவுபற்றி வன்றொண்டர் கூறியதாக வெளிப்பட்ட 'பாசமாம்வினைப் பற்றறுப்பான்மிகும், ஆசை மேலுமொ ராசையளித் தெனத் தேசின் மன்னியென் சிந்தை மயக்கிய, ஈசனாருள் எந்நெறிச் சென்றதே' என்னுந் திருப்பாடலின்கட் டோன்றும் தெய்வமணம் மிகவும் சிறந்ததாகும். இதன்கண் "பற்றறுப்பான் மிகும் ஆசை" யெனவும் "ஈசனாருள்" எனவும் போந்த கருத்துக்கள் சிந்தித்து இன்புறத் தக்கன.

இம்மட்டோ! இருள் வரவுக்கும் நிலவெழுச்சிக்கும் உவமங் கூறுங்கால், "ஐந்தெழுத்து முணரா அறிவிலோர் நெஞ்சு மென்ன இருண்டது நீண்டவான்" எனவும் 'அண்ணல் வெண்ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா' எனவும் நம் சைவ சமயசாதனங்களைக் கூறியருளிய அழகு, அன்பர்கள் உள்ளத்தை மிகவும் இன்புறுத்துவதாகும். இன்னோரன்ன சந்தர்ப்பங்களில் மற்றைக்கவிகள் இந்நினைவை மேற் கொள்ளார். அருட்கவிகளுக்கே இது வாய்ப்பதாகும். இன்னும் இத் தெய்வச் சுவைமிக்க பகுதிகள் பல. புலவர் திலகமாகிய சிலப்பதிகார நூலாசிரியர் இன்பம் முதலிய ஒன்பான் சுவைக்கும் நிலைக்களமாகத் தாம் யாத்த அத்தீஞ்சுவைக் காப்பியத்தின் இறுதியில் "தெய்வந்தெளிமின், தெளிந்தோர்ப்பேணுமின்" என்றுகூறிய பயனுரையைச் சிந்தித்துப் பார்மின்கள்! வடமொழி மகாகவியாகிய காளிதாசர் இரசபுஞ்சமாக வியற்றிய சாகுந்தல நாடகத்திறுதியில் பாதவாக்கியமாகக் கூறிய "ப்ரவர்த்ததாம் பிரகிருதிஹிதாய பார்த்திவ: ஸரஸ்வதீ சுருதிமஹிதா மஹீயஸாம்!, மமாபிசக்ஷபயது நீலலோஹிதஃ புனர்பவம் பரிகதசக்திராத்மபூஃ !! என்னும் சுலோகத்தின் பொருளை உற்று நோக்குவோமாயின், காதன்மணங் கமழவியற்றிய அந் நாடகத்திறுதியில் தன்னுள்ளக் கிடக்கையை அக்கவி எவ்வளவு உயரிய நோக்கத்தோடு வெளிப்படுத்தியுள்ளாரென்பது புலனாம். இச்சுலோகத்தின் பொருளாவது: 'மன்னுயிர் நலங்குறித்து மன்னவனரசு செய்க; செவிப்



வன் வேண்டுமென்பதில் ஐயம் யாதுளது? அப்பெருமான் அறிவிக்க அறியுமியல்பினதாகிய இவ்வுயிர், தன்னியல்பையும் பேரறிவுப் பிழம்பாகவுள்ள தலைவனியல்பையும் அறிதற்குத்தடையாகத் தன் மாட்டுள்ளது யாதென ஆராயப்புகின், அஃது அநாதியே தன்னைப்பற்றி நின்று தன் அறிவை மறைத்து நிற்கும் அழுக்கு ஒன்று என்பது போதரும்.

அவ்வழுக்கையே ஆணவமலம்என்ப. இவ்வாணவ அழுக்கைக் கழுவுதற்கே உடல், கரணம், இடம், நுகர்ச்சிகளை இறைவன் நமக்களித்துப் பிறப்புக்களிற் செலுத்துகின்றான். உடல், கரணம், இடம், நுகர்பொருளாகிய இவையெல்லாம் தோன்றுதற்கு இறை, உயிர், தளை என்னுமிவற்றின் வேறான காரணம் இருத்தல் வேண்டும். அக்காரணங்களையே மாயாகன்மங்களென்ப. நாம் செய்யும் நல்வினை தீவினைகள் அறம் பாவமென்று கட்டுற்று இன்பதுன்பங்களாக நம் அநுபவத்துக்கு வருகின்றன. இக்கன்மப்பயன் நுகர்தற்கு மாயை யென்னும் வித்தினின்று நமக்கு உடல் முதலியவை கிடைக்கின்றன. உடல் முதலியவற்றை உயிரே படைத்துக் கொள்ள வியலாது; அது சிற்றறிவும் சிறுதொழிலு முடையதாகலான். மாயா கன்மங்கள் அறிவில்பொருள்களாதலின் தாமே தாரா. ஆகலின் எல்லா ஆற்றலுமுடைய இறைவனே அவற்றி னியல்பறிந்து கூட்டுவிப்பவனாவான். மாயா கன்மங்கள் மூலமலவாற்றல் கழிதற்கு ஏதுவெனினும், அதன் கழிவில் தம் காரியங்களும் ஒழிவுற அந்நிலையில் கட்டனைத்தும் விட்டு நீங்கப்பெற்ற உயிர், சித்தம் சிவமாகப் பெற்று இறைவனோடிரண்டறக் கலந்து அழிவிலாப் பேரின்பத்திற் றிளைத்து நிற்கும். இவ்வுண்மைகளையே பலதிறப்படுத்துச் சைவசித்தாந்த நூல்கள் வெளிப் படுத்துவனவாம். இறை, உயிர், தளை என்பவற்றை வடநூலார் பதி, பசு, பாசம் என்பர். பாசத்தின் வகைகளை ஆணவம், கன்மம், மாயையென முத்திறப் படுத்தும், மாயேயம், திரோதானம் கூட்டி ஐவகைப்படுத்தும் கூறுப. "மும்மை மலமறுவித்து" எனவும் 'மலங்களைந் தாற்சுழல்வ" னெனவும் மணிவாசக ஞானப் பாசுரங்கள் வெளிப்படுத்தின.

## இறைவனை யடைதற்குரிய நெறிகள்

உயிர் கட்டறுத்து வீடு பெறுதற்கு நம் அரிய சமயத்திலமைந்த சாதனங்கள் மிகச் சிறந்தனவாம். சரியை முதலிய நான்கு வழிகள் ஆன்மாக்களின் பக்குவ நோக்கி யமைந்தன. அவற்றினியல்கள் மிக்க விரிவுடையன. சரியை முதலிய நான்கு வழிகளையும் ஒன்றுக்கொன்று சாதன சாத்திய முறையில் வைத்து இறுதியிலுள்ள ஞானத்தால் வீட்டின்பம் அடையலாமென உணர்த்தப்பட்டது. இவ்வுண்மையைச் சிவயோகியாராகிய தாயுமான அடிகள், 'விரும்புஞ்சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கும்-அரும்பு மலர் காய் கனிபோல் அன்றோபராபரமே'யென்று கூறியருளினார். ஒன்றினையொன்று இன்றியமையாமைக்கு அரும்பு மலர் காய் கனியென எடுத்துக் காட்டிய அநுபவ உவம அழகு மிகப் பாராட்டற்பாலது. இந்நெறிகளை இன்னுஞ் சற்றுச் சுருக்கி அறிவுநெறி அன்புநெறி யென வகுத்து விளக்கும் தெளிவு மிகச்சிறந்ததாகும். இவற்றை ஞான மார்க்கம், பக்தி மார்க்கமென்றுங் கூறுப.

## அறிவு நெறி

அறிவு, நூலறிவு அநுபவஅறிவு என இருதிறப்படும். இவற்றை அபர ஞானம், பரஞானம் என்றுங்கூறுப. அநுபவ அறிவைப் பயப்பதற்கு நூலறிவு சாதனமாகும். 'நானார்? என்னுள்ளமார்? ஞானங்களார்?' என்னும் ஆராய்ச்சியிற் றலைப்பட்டுச் சிவஞான போத முதலிய அறிவு நூல்களை ஆசிரியர் முகமாக வுணர்ந்து உண்மைப்பொருள் தெளிதலே நூலறிவாகும். அவ்வுண்மைகளைத் தேவாரம் திருவாசகம் முதலிய துதி வடிவிலமைந்த அருட்பாசு

ரங்களானுணர்தலும், பெரிய புராண முதலிய வரலாற்றுண்மை கூறும் சிவநெறி யிலக்கியங்களா லுணர்தலும் அதன் பாற்படும். "பந்தமும் பிரிவுந் தெரிபொருட் பனுவற் படிவழிச் சென்றுசென் றேறி" என்பதும் இதனை வலியுறுத்தும். இந்நூல்கள் நம் பண்டைப் பெரியார் கருணை கூர்ந்தளித்த விலை வரம்பில்லா உயர் மணிகள் நிறைந்த ஒப்பற்ற கருவூலங்களேயாம். இந்நூல்களிற் பயின்ற முறையை அநுபவத்திற் கொண்டு செய்கையிற் பயன்படுத்தல் அநுபவ ஞானமாகும். அநுபவ மென்பது அழுந்தியறிதலாகும். பொறிகளாற் பற்றப்படும் பொருள்களை அறியு முறையில் ஈடுபட்டழுந்தி யறிதலே ஈண்டு அநுபவமாகும். இச் சொற்பொருளை இங்ஙனங் கண்டு தமிழ்மொழியிற் றந்த மாதவச் சிவஞான முனிவர் பெருமை உலகறிந்தது.

ஒரு பழச்சாற்றைத் துய்க்குங்கால் நாப்பொறி பொதுவாக அறிதலினும் அழுந்தி யறிதலே அநுபவமாகும். இங்ஙனமே நூல்வாயிலாகக் கண்ட சாதனங்களை அகவுணர்வி லமைத்து அழுந்தியறிதல் சமயாநுபவ சாதனமாகும். சிவோகம் பாவனை சிவநெறியில் முக்கிய சாதனமாகக் கூறப்பட்டுள்ளது. அதனியல்பை நூல் வாயிலாகத் தெளிதல் நூலறிவாகும். அப்பாவனையை மேற்கோடல் அநுபவ அறிவாகும். சிவோக மென்பதன் பொருள் "சிவன் நான்" என்பதாம். இதனாலேயே "நான்" என்பதற்கு வாச்சியமாகவுள்ள உயிரும், "சிவன்" என்பதற்கு வாச்சியமாகவுள்ள இறைவனும் எனப்பொருள் இரண்டு போதரும். உயிராகிய 'நான்' எதற்காகச் சிவபாவனை செய்தல் வேண்டும் எனக் கருதுங்கால், என்பாலுறைந்துள்ள அழுக்காகிய ஆணவத்தைப் போக்குதற்கேயாமென்பது புலனாகும். இதனாலும் தடையாகவுள்ள பாசம் ஒரு பொருளென்பதும் வெளிப்படும். சிவோகமென்பதனால் சிவனும் உயிரும் பொருள் வகையிலொன்றாகா. மலநிவிர்த்திப்பயன் கருதி அப்பாவனை விதிக்கப்பட்டுள்ளது. பாம்பு தீண்டலாலுண்டாகிய நச்சுத்துன்ப மொழிதற்கு, மாந்திரிகன் கருடோகம் எனப் பாவித்துப் பார்க்க வேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. ஆன்மா சார்ந்ததன்வண்ணமாந் தன்மைத் தாதலின் கருடனுருவ பாவனையால் அம்மந்திர மூர்த்தியாகி நஞ்சொழிவிற்குக் காரணமாகின்றான். பொருள்வகையின் உருவு திரிந்து கருடனாவதில்லை. அது போலவே பேரொளிப்பிழம்பாகவுள்ள சிவபாவனையில் உயிர் சிவனாவதில்லை. ஆணவ இருள் நீங்கப்பெற்று, உயிர் "ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத் தாணுவினோ டத்துவிதம்" சார்கின்றது. இதனைத் திருமூலராகிய சிவாநுபவச் செல்வர் "கருடனுருவங் கருதும் பொழுதிற், பருவிடந் தீர்ந்து பயங் கெடுமாபோல், குருவினுருவம் குறித்தவப் பொழுதே திரிமலந் தீர்ந்து சிவனவனாமே" என்று வெளிப்படுத்தருளிச் செய்வாராயினர்.

இப்பாவனையில் உறைத்து நிற்றல் அனுபவ அறிவாகும். பாவனைக்குப் பயனுண் டென்பதை நம் முன்னையோர் மிகத் தெளிவாக உணர்ந்துள்ளார்கள். இக் காலத்து மேலைத் தேயத்து அறிஞரும் பாவனைப் பயனைத் தம்மநுபவத்திற் கண்டு நம்பி வருகின்றனர் என்ப. இச்சிவாநுபவ அறிவு கைவரப் பெற்றாரே ஐம்புல வேடர்களால் நேரும் துன்புறுநிலையை யொழித்துச் சிவானந்தத்திற் றலைப்படற் குரியராவர். இவ்வுண்மையை நம் திருநாவுக்கரசு அடிகள்,

"புள்ளுவ ரைவர்கள்வர்
  புனத்திடைப் புகுந்துநின்று
துள்ளுவர் சூறைகொள்வர்
  தூநெறி விளையவொட்டார்
முள்ளுடை யவர்கள்தம்மை
  முக்கணான் பாதநீழல்
உள்ளிடை மறைந்துநின்றங்
  குணர்வினால் எய்யலாமே"

என்னும் அருட் பாசுரத்தால் வெளி



யிட்டருளினார்கள். ஐம்புலன்களையும் வேடர்களாகிய கள்வர்களென்றனர்; சிவார்ப்பணமாகக் கொள்ளப் படும் பொருள்களை யெல்லாம் தமவாகக் கொண்டு மாறி நின்று மயக்கி ஆறலைத்துச் சூறை கோடலான், "மனமெனும் புனமே" யென்னும் பட்டினத்தடிகள் கருத்துப்படி, 'புன'மென்பது ஈண்டு மனமாகும். அஃது அக்கள்வர்க்குகந்த விடமாதலின் "துள்ளுவ" ரென்றார். தூநெறி - செந்நெறி. அந்நெறியைத் தடைப்படுத்தலின் விளைய வொட்டா ரெனவும், எதிர்த்தாரை யூறுபடுத்துங் கொடுந் தன்மையுடைமை பற்றி "முள்ளுடையவர்க" ளெனவும், அஃதுடைமையால் மறைவினின்று அம்பெய்து வீழ்த்த வேண்டுதலின், "முக்கணான் பாத நீழல் உள்ளிடை மறைந்துநின்" றெனவும், உணர்வாகிய அம்பினா லெய்யலாமெனவும் கூறியருளினார். ஈண்டு உணர்வு அநுபவ அறிவாகிய சிவஞானமாகும். இன்னும் இவ்வநுபவத்தை உயிரநுபவம், அருளநுபவம், சிவாநுபவம் என வகைப்படுத்துரைப்பாரு முளர். இதனை "பொத்திய மூலமலப் பிணி தவிர்க்கும் பொருளருளநுபவமதற்கு, பத்திய முயிரினநுபவம் இதனைப் பற்றறப் பற்றுதி" யென்பது முதலிய செய்யுட்களில், சிவநேய மிக்க இராமலிங்க அடிகள் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வறிவு நெறியையே மணிவாசகப் பெருமான் "நெறியறியேன் நின்னையே யறியேன் நின்னையே யறியுமறிவும் அறிவேன்" என்றருளிச் செய்வாராயினர். நூலறிவும் அநுபவ அறிவுஞ் சிறந்த சாதனமாதலை நம் பெரியார், "கற்றிலேன் கலைகள் ஞானம் கற்றவர் தங்களோடும், உற்றிலேனாதலாலே உணர்வுக்குஞ் சேயனானேன்" எனவும், "கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகே னாயிடினும்" எனவும், "ஞானத்தா லுனைநானுந் தொழுவனே" எனவும் மிகத் தெளிவு படுத்தி விளக்கி யுள்ளார்கள்.

நூல்களைப் பற்றியும் அநுபவம்பற்றியும் நிகழும் ஞானத்தையே அறிவுநெறியெனக் கண்டு அந்நெறிக்கட் சென்றால் இன்ப வடிவினனாகிய இறைவனை யுணர்ந்து பேரின்பத்திற் றலைப்படலாமெனு முண்மையை நம் வாகீசப் பெருந்தகையார், சிற்றறிவினேமும் செவ்விதிற் றெளிந்து உளங்கொளும் வண்ணம் "உடம்பெனும் மனையகத்து வுள்ளமே தகளியாக, மடம்படும் உணர்நெய்யட்டி உயிரெனுந் திரிமயக்கி, இடம்படு ஞானத்தீயா லெரிகொள இருந்து நோக்கில் கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே" என்று தெளிவுபடுத் தருளினார்கள்.

இதன் பொருள்: ஈரிட்ட ஆணவக் கருவறையிற் கிடக்கின்ற நாம், மெய்ஞ்ஞான விளக்கையேற்றி அப்பேரொளிக்கண் அகக்கண் கொண்டு காண்பேமாயின், இறைவன் கழலடி காணலாமென்பதாம். விளக்கிடுதற்கு முதலில் வீடும், பின் அகலும், நெய்யும், திரியும், நெருப்பும் வேண்டும். "உடம்பை வளர்த்தேனுயிர் வளர்த்தேனே" யென்னும் அருளுரை இப்பயன் கருதியே எழுந்ததாகும். இவ்வுருவகங்கள் மனத்தை மிகவுமின்புறுத்துதலோடு மெய்யநுபவத்தையும் வெளிப்படுத்துகின்றன. "மடம்படு முணர்நெய்" யெனவும் "ஞானத்தீ"யெனவும் ஈரிடத்தும் உணர்வு, ஞானமென ஒரு பொருளை நுதலிவருஞ் சொற்களே உருவகப் படுத்தப்பட்டுள்ளன. ஈண்டுப் பொருள் வேற்றுமை வேண்டும். இன்றேல் உருவகவியல் சிதையும். "மடம்படு முணர்"வென்பது அறியாமை கெடுதற் கேதுவாகிய நூலறிவென்பதூஉம், "இடம்படு ஞான" மென்பது, மூலமல விருளின் ஆற்றல் குன்ற யாண்டும் பரந்தெழூஉம் அநுபவஞான மென்பதூஉம் போதரும். இஞ்ஞான விளக்கொளியிற் காண்பவன் ஆன்மாவாகவும், உயிரெனுந் திரியெனக்கூறியது எங்ஙனம் பொருந்துமெனின், "நிலநீர் நெருப்

புயி"ரென்புழி, உயிர் காற்றென்று பொருள் பட்டாங்கு ஈண்டுப் பிராணவாயுவெனப் பொருள் கோடல்வேண்டும்.

## அன்பு நெறி

இங்ஙனம் நூலறிவு சாதனமாக அநுபவ அறிவுபெற்று அதன் வாயிலாக வீட்டின்பமெய்தல்ஒன்று;மற்றொன்று நம் பெரியார் பலரும் மேற்கொண்டுள்ள கனிந்த பக்தி மார்க்கமாகிய அன்பு நெறியாகும். அன்பிலறிவும் அறிவிலன்பும் கலந்தனவே யாயினும் சிறப்பு நோக்கித் தனித் தனியாகக் காட்டப்பட்டன. அன்பினியல்பைக் கூறின் அது விரிந்த ஆராய்ச்சியில் முடியும். சுருக்கிக் கூறின், இனியாரிடத்துக் கொள்ளுங் காதலே யன்பாகுமென்பதாம். இனியான், "கனியினுங் கட்டிபட்ட கரும்பினும், பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும், தனிமுடிகவித்தாளு மரசினும், இனியன்றன்னடைந்தார்க்கிடை மருதனே" யென்ற அருளுரைப்படி இறைவனே யாவன். அவனைக் குழைந்த அன்பிலே காணலாம். "ஊனெனும் பொருளானை உருகிலுள்ளுறை வானை" யென்பது அருண்மொழி யன்றோ? இன்பமே யென்னுடையன்பே" எனவும், "அன்பினில் விளைந்த ஆரமுதே" எனவும் போந்த அருளுரைகளால் அன்பிலே தோன்றும் இன்பவடிவினனாகிய இறைவனை அன்பெனச் சுட்டியது நோக்கத்தக்கது. "அன்பென்ப தொன்றின் தன்மை அமரருமறிந்ததன்றே" என உலகியலன்பே இங்ஙனம் பாராட்டப்படுமாயின், இறைவனைப்பற்றி நிகழும் பேரன்பின் மாட்சி எங்ஙனம் அளந்து பேசுந் தரத்ததாம்?

அடியார் பலரும் ஞானநிலையெய்திப் பின் அன்பு நெறியையே மேற்கொண்டுள்ளாரென்பதும், அவருட் சமயகுரவர் அருளிச்செய்த அருட் பாசுரங்களெல்லாம் அன்பெனுந் தெவிட்டா அமிழ்த மழையாக வெளிப் பட்டனவென்பதும் உணரத்தக்கன. அக்குரவர்களின் மனமொழி மெய்கள் சிவவுருவத் திற்றிளைத்து நிற்பச் சிவகரணமாக மாறிய தம்முள்ளக்கிழியில் இறைவன் றிருவுருவை யெழுதி 'எனை நானென்பதறியேன் பகலிரவாவது மறியேன்' என்றபடி, சீவபோதமிழந்து அனலிற்பட்ட மெழுகுபோல் நெஞ்சம் நெக்குருகி நிற்க, அந்நிலையில் அப்பாசுரங்கள் அப் பெருமக்கள் வாயிலாகத் தங்குதடையின்றியொழுகும் தேனொழுக்குப் போல வெளிப்பட்டன வென்பதைப்பெரியபுராண படனமுடையார் யாவரும்இனிதுணர்வர். அவர்கள்மெய்யநுபவத்தை அப்பாசுரங்களிற்காணுந் தொறும் காணுந்தொறும் அறியாமை வயப்பட்டுழலுஞ் சிறியேங்கள் மனமுங்கரையுமாயின், அதன்பெருமையை என்னென்பேம்! என்னென்பேம்! சிவ நேயர்களே! அவ்வருட் பாசுரங்களிற் றிளைத் தின்புறுதலொன்றே நம அறிவு வாழ்க்கையாலெய்தும் முடிந்த பெரும் பேறாகக் கொள்ளினும் அது மிகையாகாது. ஆ! ஆ! நினையுங்கால் நெஞ்சம் உருகுகின்றது! கூறுங்கால் என்றுங்காணாத இனிமைமிக, நா அள்ளூறித் தித்திக்கின்றது! கேட்குங் காற் செவிகள் குளிர்கின்றன! உடல் தன் வயமிழக்கின்றது! பளிங்கனைய ஆன்மா அவ்வருட் பாசுர மயமாக மாறுகின்றது! சொல்லும்,பொருளும், இசையும் சிவமணங் கமழ்கின்றன! பொறி புலன்களெல்லாம் சிவ மயமாகின்றன!

இங்ஙனந் தித்திக்குமணி வார்த்தைகளைத் திருச் செவியிலருந்தவே பாட்டுக்குருகும் பனிமலை வல்லி பாகன் செழியர் மருகனைத் தென்றமிழ் நாட்டில் தெய்வச் செங்கோல் செலுத்தும் அரசாயினன். அவ்வருட் பாசுரங்களை அருளிய பெரியார் திருவுருவை உள்ளத் தெழுதிய சேக்கிழாரென்னும் புலவர் பெருமான், அன்பு வயப்பட்டருளிய திருத்தொண்டர்புராணத்துள்ள பின் வருஞ் செய்யுட்களில் அவ்வுண்மை யநுபவத்தைப் பரக்கக்காணலாம்.



" வார்ந்து சொரிந்த கண்ணருவி
 மயிர்க்கால் தோறும் வரும்புளக
மார்ந்த மேனிப் புறம்பலைப்ப
 வன்புகரைந்தென் புள்ளலைப்பச்
சேர்ந்த நயனப் பயன் பெற்றுத்
 திளைப்பத் திருவே கம்பர்தமை
நேர்ந்த மனத்தி லுறவைத்து
 நீடும் பதிகம் பாடுவார் "

" தூய வெண்ணீறு துதைந்த பொன்
 மேனியுந் தாழ் வடமும்
நாயகன் சேவடி தைவரு
 சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்
 பதிகச் செஞ்சொன்
மேய செவ் வாயு முடையார்
 புகுந்தனர் வீதியுள்ளே "

என்றிங்ஙனம் இறைவனைப் பாடினரைப் பாடிய செய்யுட்களே நம்மைப் பரவசப் படுத்துகின்றன. இப்பாசுரங்களின் முகமாகவெளிப்பட்டஅன்பு நெறியை மாசற மேற்கொண்ட கண்ணப்பர் வரலாற்றுச் செயல்களெல்லாம் அன்பின் முழு இலக்கணங்களுக்கும் இலக்கியமாக நின்றொளிர் வனவாம். "அன்பு பிழம்பாயினா ரவர் கருத்தினளவினரோ" என்றபடி அன்புருவமே அவர் வடிவம். இவ்வுண்மையை உள்ளவாறுணர்ந்தவர்கள் சமயகுரவர்கள்.

அவர்கள் கலைகளிலே பாராட்டப் பெற்றமையானன்றே கண்ணப்பர் 'கலை மலிந்த சீர் நம்பி'யாயினார். திருநெறித் தமிழ் விரகராகிய ஞானசம்பந்தர் திருக்காளத்தி சென்று முதலில் இறைவனையும், பின் கண்ணப்பரையும் வணங்கிய முறையை எடுத்துக் கூறுந் தொண்டர் புராணப் பகுதி யாவருள்ளத்தையுங் கனிவிப்பதாகும். "வீழ்ந் தெழுவார் கும்பிட்ட பயன் காண்பார் போல் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்" என்பர். ஞானசம்பந்தர்க்குச் சிவதரிசனப் பயனாக வேடர் பெருமான் தரிசனங் கிடைத்ததாம். காரணம் சிலை வடிவத்தில் இறைவனைக் காண்பதினும் அன்புப் பிழம்பாகவுள்ள கண்ணப்பர் வடிவத்திற் காண்டல் சிறந்ததென்பதுபோலும். விதி நெறியிற் கடியப்பட்ட எச்சில் ஊன் முதலியன அன்பு வயப்பட்டு இறைவற்கு உவப்பாயின. விதிநெறியிற் போற்றப்பட்ட மலர், நறுநீர், அன்ன முதலியனவும், கண்ணப்பர் அன்பு நெறியிற் கடியப்பட்டன. ஆயினும் அப்பொருள்களும் விதிநெறி பற்றியொழுகும் சிவகோசரியாரது அன்பின் அளைந்தனவாதலின் பெரியோர்களாற் போற்றப்பட்டன. இவ்வுண்மையை "ஊனொ டுண்டல் நன்றென ஊனொ டுண்டல் தீதென, ஆன தொண்டர் அன்பினாற் பேச நின்ற தன்மையான்" என்னுந் தமிழ்மறை நன்கு விளக்கும். சித்தம் சிவமாகப் பெற்றால் அன்பு மேம்பாட்டாற் செய்வனவெல்லாம் தவமே யாமென்பதை இவ்வரலாற்றுப் பகுதி தெளிவுறுத்துகின்றது.

சித்தஞ் சிவமாகப் பெற்றார்க்கு விடய வாதனைகளால் யாதும் ஏதம் விளையாது. அங்ஙனம் பெறாத நிலையிற் சிறிய புலனுகர்ச்சியும் அவர் தம் நெஞ்சத்தைக் கலக்கும். இவ்வுண்மையை "எழிலையாழ் செய்கைப் பசுங் கலன் விசும்பி னின்றுளி பட நனைந் துருகி, அழலையாள் புருவம் புனலொடுங் கிடந்தாங்கு" என்னுந் திருவிசைப்பாவிற் காணலாம். இதன் பொருள் சிறு நீர்த்துளிக்குங் கரையும் பசுமட்குடத்தை நெருப்பிற் சுடப் பட்டபின் பெரும்புனலிலிடினும் அஃது உருச்சிதையா வாறு போலத் திருவருட்பதிவுபெற்ற மனம் எத்தகைய புலனுகர்வாலுஞ் சிதைவுறாதென்பதாம். (இப்பாசுரப் பகுதிக்குப் பொருள் வரைந்தா ரொருவர் அழலையாழ்பு - உருவம் - எனப் பதப் பிரிவு கொள்ளாமல், 'அழலை யாழ் - புருவம்' எனப் பிரித்துப்

'பொருள்வெளிப்படை'யென்று குறித்துள்ளார். . அவர் செய்த பதப்பிரிவே அவர் அப்பொருளறியா ரென்பதைப் புலப் படுத்துவதாகும்) ஈண்டறிந்த அறிவுநெறி அன்பு நெறியாகிய இரண்டும் சிவநலம் பெறுதற்குரியவென்பது முடிந்த பொருளாம். இவ்விருவகைச்சிறந்த சாதனங்களையும் நம் பெரியார் அருள்சுரந்து நமக்கு வெளியிட்டனர். "விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல், மறைய நின்றுளன் மாமணிச் சோதியான், உறவு கோல்நட்டுணர்வு கயிற்றினல்,முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே" என்னும் அப்பர் அருண்மொழியில் 'உறவுகோ' லெனவும், 'உணர்வுகயி'றெனவும்கூறியது, முறையே அன்புநெறியையும் அறிவு நெறியையுமேயாம். இவற்றுள், கடைதற்குக் கயிற்றினுங் கோல் மிக நெருங்கிய சாதனமாதலை உய்த்துணரின், ஞானத்தினும் அன்பு விழுமிய தென்பது போதரும். பாசநீக்கத்திற்ரேன்றும் அறிவினும் ஆண்டானிலே நோக்கியுண்டாம் அன்பு பிறப்பிடத்தானுஞ் சிறந்துளதென்று கூறுவாருமுளர்.

## ஆண்டானடிமைத் திறம்

இன்னும் நம் சைவசித்தாந்தச் செந்நெறியில் ஆண்டானடிமைத் திறம் மிகத் தெளிவாக வலியுறுத் துரைக்கப் பட்டுள்ளது. கட்டு நிலையினும் வீட்டுநிலையினும் உயிரைவிட்டு நீங்காதது இத்தொண்டாந் தன்மையொன்றே. "கண்டவிவை யல்லேனென்றகன்றுகாணுக் கழிபரமுநானல்லேன் எனக் கருதிக் கசிந்த தொண்டு" என்றதனல் இத்தொண்டினிலக்கணம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இறைவற்குப் பசுக்களடிமையும் பாசங்களுடைமையுமாகும். "எல்லா முன்னடிமையே எல்லாமுனுடைமையே" என்பதும் அக்கருத்துப் பற்றி யெழுந்ததாகும். அடிமைத் தன்மையில் ஒரு சிறிதாவது முனைப்பிருத்தலாகாது.சிறிதுமுனைப்புளதேனும் அடிமையிலக்கணம் பிழைபடும். இது பற்றியே "தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ் சார்தல்" வேண்டுமென்பர். பெரியாரொருவரை யொருவர் சந்திக்குங்கால், ஒருவர் மற்ருெருவரை நோக்கித் 'தாங்கள் யாவர்?' என வினவுங்கால், வினவப்பட்டார் தம்மையறிவிக்க, வேருெருவ ரில்லாதவழித் தாமே தம்மைக் கூற நேரின், தம்மைக் கண்டு கொள்ளக் கூடிய நிலையில் தம்மெளிய நிலையை யெடுத்துரைப்பரென்பதை நாவரையரும் அப்பூதி அடிகளும் சந்தித்த பொழுதுண்டாகிய வினு விடைகளா லறியலாம்.

அப்பூதியடிகள், "எங்குறைவீர் நீர் தாம் யார்" என்று வினவ, வாகீசர் "பிறதுறையி னின்றேற அருளு பெருஞ் சூலையினல் ஆட்கொள்ள வடைந்துய்ந்த, தெருளு முணர்வில்லாத சிறுமையேன் யா"னென்ருர். உண்மையான தொண்டக் குலத்தைச் சார்ந்தார்க்குப் பண்டைக் குலமாகிய சாதி பற்றிய வேறுபாடின்ரும். இவ்வுண்மையையும் இவ்வரலாறு நன்று தெளிவிக்கும். "குலந்தருஞ் செல்வந் தந்திடும்.........நாராயணு வென்னு நாமம்" என்புழி, குலந்தரு மென்பதற்கு உயர்குலப் பிறப்பைத் தருமெனப் பொருள் கொள்ளின், இயல்பாக உயர்குலப் பிறப்புடையார்க்கு இப்பயன் வேண்டாததாக முடியுமாகலான், இங்குக் கூறிய குலம் பண்டைக் குலமன்று; தொண்டக் குலமேயாமென்பர் அப்பாசுர உரையாசிரியர். பண்டைக்குல வொழுக்கிறந்து இத் தொண்டக் குலத்துச் சிறந்த அப்பூதியடிகள் வரலாற்றைக் கூறத் தொடங்கிய நம்மருட் பெருங்கவிஞர், இன்னவூரி லின்ன குலத்தில் இன்னருளர் எனக் கூறு முறையை விடுத்து, "தாண்டவம் புரிய வல்ல தம்பிரானருக் கன்பர்" என அவர்தம் தொண்டக்குலச் சிறப்பையே சுட்டிக் கூறியருளினர்.புகழை ஒரு சிறிதும் வேண்டாத அடிகளை "ஈண்டிய புகழின் பாலா" ரென்றது அடிகள் வேண்



டாத நிலையில் புகழ் தானே நெருங்கி வருதல் பற்றியாகும்.

இவ்வாண்டானடிமைத் திறத்தை நம் சகோதர மதமாகிய வைணவ சமயம் சேஷ சேஷி பாவமாக வைத்து விளக்கிக் கூறும். அடிமையினியல்பைப் பற்றி அச்சமயத்தார் கொண்ட கருத்தை ஒரெடுத்துக் காட்டால் விளக்குவேன். இராம கதையில் ஓரிடத்தொருவர் இலக்குமணனை நோக்கி, "இராமனுக்கும் உனக்கும் என்ன இயைபு" என்று வினவ "அஹமஸ்யா வரோப்ராதா குணைர்தாஸ்யம் உபாகத:" என்ற இலக்குமணன் விடை கூறியுதாக மதுர கவியாகிய வான்மீகியார் வெளியிட்டுள்ளார். இதன் பொருள் யான் இவற்குத் தம்பியும் அடிமையுமாவே னென்பதாம். இங்கே திருவாய் மொழியி னுரையாசிரியர் அடிமைத்தன்மையிற் சகோதர பாவம் எறிட்டது முரணுறுவதா மென வாசங்கித்து "அவனொருபடி நினைப்பன், யான் ஒருபடி நினைப்பன்" என்பது இலக்குமணர் கருத்தாகக் கொண்டு காட்டி, அம் முரண்பாட்டைக் களைந்து அடிமை யிலக்கணம் பிழை படாமையை எடுத்துக் காட்டினர். இராமன் பின்னேனென இலக்குமணற்குச் சுமித்திரையார் விடை தருங்கால், "பின்னும் பகர்வாண் மகனே யிவன்பின் செல் தம்பி யென்னும் படியன் றடியாரி னேவல் செய்தி" யென்று இட்ட கட்டளையால் அடிமைத் தன்மைக்குச் சோதர பாவ முரண் படுவதாகு மென்பது வெளியாகின்றது. இங்கே காட்டப் பட்ட இவ்வரைச் சுலோகத்தின் முற்பகுதி இராமபிரான் கருத்தாகவும், பிற்பகுதி தன் கருத்தாகவும் இலக்குமணன் கூறியதாகக்காட்டியது மிகவும் பாராட்டற்பாலது. இவற்கு யான் தம்பியாவே னென்றது, இவனை வினவினுல் என்னைத் தம்பி யென்பன். என் கருத்து அஃதன்று. யான் அடிமையே என்ருனும். இப்பணிவு நிலை மிகவும் போற்றத் தக்க தொன்று.

இறைவனை நோக்கி அடியார் தம் கடமையாகிய "கூடு மன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டா விற" லுடைய ராதலே அடிமை யியல்பிற் பிழையாததாகும். அவ் வடியார் வீடெய்தற்குத் தடையாகவுள்ள தளைகளைக் களைதற்கு இறைவன் றிருவடி நாட்டத்தி லீடுபடுதலே கடன். அதற்குப் பயன் விளைத்தல் இறைவன் கடமையாகும். அதனையும் வேண்டி நிற்றல் அடிமைத் தன்மைக்கு ஒவ்வாத தொன்ரும். "மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும் அண்ணு வெண்ணக் கடவேனே அடிமை சால அழகுடைத்தே" என்னும் அருண் மொழி இவ்வுண்மையை வலியுறுத்துவதாகும். இவ்வடிமைத் தன்மை கட்டு நிலையிற்போல வீட்டு நிலையினும் ஆன்மாவிற்குரிய தென்பதை "அதனி னீறலா வொன்று பலவாறே தொழும்பாகு மங்கு" என்பதனுனும், "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட" என்பதனுனும் தெளியலாம். அங்கு என்பது வீட்டு நிலையிலென்று பொருளாதலையும், சிவமாக்கிய பின்னும் ஆட்சி கூறப்படுதலையும் உற்றுணர்க.

## வீட்டு நிலை

இனி நம் சமயத்தின் வீட்டு நிலையைப் பற்றி விளக்கும் பகுதியும், அதற்கு எடுத்துக்காட்டாகவுள்ள உவமங்களும் அளவை நூன்முறையிற் சிறிதும் பிறழ்தலின்றி அமைந்துள்ளன. கட்டறுத்து வீடுபெறும் ஆன்மா இறைவனே டிரண்டறக் கலந்து சிவாநுபவ நுகர்ச்சியிற் றலைப்படுங்கால் பொருள் வகையா லிரண்டாயினும் அநுபவநிலையில் அவனெனத் தானென வேற்றுமை யின்றி அத்துவித சம்பந்தம் பெற்று நித்திய வின்பத்திற் றிளைத்து நிற்கும். அத்துவிதச் சொல்லாராய்ச்சி மிக விரிவுடையதாகலின் ஈண்டு விளக்க முற்பட்டிலன். வீட்டு நிலையினும் இறை, உயிர், தளை என்னும் முப்பொருளுண்மையை இச்

சமயம் தெளிவுறுத்து நிற்கின்றது. நித்தியப் பொருள்களுக்கு யாண்டாவது ஓரிடத்து அழிவு கேட்கப்படுமாயின் நித்தியத்துவம் நிலை பெறாது.

முத்தி நிலையில் இன்ப வடிவினனாகிய இறைவனும் அவனோடிரண்டறக் கலந்து அவ்வின்ப நுகர்ச்சியி லழுந்தி நிற்கும் ஆன்மாவுமாகிய இருபொருளுண்மை பெறப்படுமாயினும், கட்டு நிலையிற்றடையாக விருந்து சிவசாதனங்களா லொழிந்த மலத்துக்கு ஆண்டு அவகாசம் இல்லையாதலின், அதன் நித்தியத்துவம் எங்ஙனம் நிலைபெறுமெனின்; முக்தி நிலையில் அவ்வான்மாவைப் பந்தித்திருந்த மலத்தின் ஆற்றல் அறவே யொழிந்ததன்றி மலம் என்னும் பொருட்குக் கேடின்றென்க. முத்தியிற்றலைப்படாத மற்றையுயிர்களிடத்து அம்மலவாற்றல் காணப்படுதலின் அப் பொருட்குக் கேடு யாண்டுமின்றாம். அங்ஙனமாயின் மல ஆற்றல் ஒழியப்பெற்ற வீட்டு நிலையில் வைத்து "முத்திதனின் மூன்று முதலுமொழியக் கேள், சுத்த வநுபோகத்தைத் துய்த்தலணு-மெத்தவே, இன்பங் கொடுத்தலிறை யித்தைவிளை வித்தல் மலம், அன்புடனே கண்டு கொளப்பா" என்பது எங்ஙனம் பொருந்துமெனின், நெடிது நேரம் பனியால் நடுக்குற்றான் ஒருவன் தீயின்பக்கல் சார்ந்துழி ஓரின்பம் எய்துகின்றான். அவ்வின்பத்திற்குக் காரணம் தீயின் சூடும் பனியினீக்கமுமேயாம். பனியாற் பற்றப்படாத நிலையிற் றீயை யணுகின் இன்பந்தோன்றாமையின் ஆண்டுப் பனி நீக்கமும் இன்பத்துக்குக் காரணமாகும். இத்தை விளைவித்தல் பனியென்புழிப் பனியினீக்கமெனக் கொள்ளல் வேண்டும். பனியாற் பற்றப்பட்டு நடுக்கமுற்ற நிலையில் தீயின் சூட்டினால் அது நீங்குங்கால் இன்பம் எய்தும். அதுபோலக் கரையற்ற காலம் ஆணவமல வெதுப்பாற் பற்றப்பட்டு துன்புற்றுநின்ற ஆன்மா தண்ணிழலாம் பதியோடு இணைந்தபொழுது அம்மலநீக்கமும் அவ்வின்பத் தோற்றத்திற்குக் காரணமாதலின் 'இத்தை விளைவித்தன் மல'மென்றார். ஆகவே நித்தப்பொருள்களுக்குக்கேடில்லாத நிலையில்வைத்தே வீட்டுநிலை நம்சமயப் பெரியோர்களாற் றெளிவுறுத்தப்பட்டுள்ள தென்க.

## நம் கடமைகள்

இன்னும் ஆன்மாக்கள் நன்னிலைப் படுதற்குரிய இன்னோரன்ன சிறந்த வுண்மைகள் பல நன்கு அமையப் பெற்ற நம் சைவ சமயத்தின் மாட்சி அளவிடுந்தரத்ததன்று. இதனைப் போதிக்கும் நூல்களோ தமிழ் வளம் பழுத்த கவிச்சுவை பொதுளஅநுபவ அருட் புலவர்பெருமக்களால் அருளிச் செய்யப் பட்டனவாகும். சாத்திரவடிவிலுந் தோத்திரவடிவிலும் முறையே அமைந்த சிவஞான போத முதலியனவும் தேவார முதலியனவும் நம் சமய வுண்மைகளாகிய மூலப் பொருள்கள் நிரம்பிய சிறந்த கருவூலங்களாக அமைந்திருக்குங் கால் நமக்கு யாது குறையுளது? அக்கருவூலப் பொருள்களை யறிந்து அனுபவிக்கவேண்டியதே நம் கடமையாகும்.

அன்பர்களே! இவ்வரிய சமயமூலதனத்தை நமக்குக் கருணையுடன் நம் பெரியார் அருளி யிருப்பவும், அந்நன்றியை மறந்து நம்மவரிற் சிலர் அன்னாரைக் குறைகூறியும், சமயவுண்மைகளை யிகழ்ந்தும், அந்நூல்களை வெறுத்துப் பேசியும் நெறிபிறழ்ந்து சைவ வுலகுக்குத்தீங்குபுரிந்து வருகின்றனர். தாமே தம்மைக் கெடுத்துக்கொள்ளும் அவ்வளவில்லையாது உண்மை யறிவாற்றலில் தலைப்படும் பருவத்தினராகிய சைவ இளைஞர்களையும் கெடுக்க முற்படுகின்றனர். அறவே நம் சமயத்தைத் தொலைத்துவிட வேண்டு மென்பார் ஒருபுறமிருப்ப, சைவ வேடந்தாங்கி நின்று புதிய முறையிற் சைவத்தை விளக்குவதாக மேற்கொண்டு நம்சமய நெறிக்கு ஒவ்வாதபல கொள்கைகளைப் பரப்ப முற்படுவோரும் ஒரு புறந்தாக்குகின்றனர், ஆ! ஆ!! ஒருநாட்டுக்குத்தன்



பண்டைச் செல்வமாகிய சமயநிலையை இழக்குங் காலம் நேரின், அந்நாட்டின்கண் நலனுங் குறைவுபடுமே! அதன்கண் வாழும் மக்கள் எவ்வகையின்பமும் இல்லாராய் விலங்கு நிலையையெய்திக் கீழ் நோக்கித் தம்பிறப்பின் பயனை வீணாக்குவரே! செய்யத் தக்கன இன்ன, தகாதன இன்னவெனும் பகுப்புணர்வின்றி உண்டியுங் காம இன்பமுமே பொருளெனக் கொண்டு அவற்றின் பொருட்டு மனம் போன வழியிற் சென்று தம் அறவாழ்க்கைப் பயனை யொரு சிறிதும் எய்தாராய்க் கேடுறுவரே! அந்தோ! பொருளில்லாதார் அதனைப் பெற முயறல் உலகியற்கை. உடையார் தம்பாலுள்ள பெறலருந் திருவை வெறுத் தொதுக்கி வறியராக முயறல் யாண்டுங் காணாததொன்று. 'காட்சியளவையிற்கொள்ளப் படுவனவற்றையே கொள்வேம்; மற்றைக் கருதலளவை உரையளவைகளை யேற்றுக் கொள்ளேம்' என்று சாதிப்பார்க்கு, 'அவர் தம் தாய் தந்தையரை எப்பிரமாணத்தாற் காட்டக் கூடு'மென்று கேட்பேமாயின், யாது விடை பகர்வர்?

காட்சியளவை யொன்றனையே கொண்டு மற்றவற்றை யேற்றுக் கொள்ளாத பூதவாதி யொருவனை மணிமேகலை யென்னும் அறிவுடை மகள் தேற்று முகமாகக் கூறிய தொன்று ஞாபகத்துக்கு வருகின்றது. அது, "தந்தைதாயரை யநுமானத்தாலலது இந்த ஞாலத் தெவ்வகை யறிவாய்" என்பதாகும். ஈண்டு அவன் தன் கொள்கையைக் கடைப் பிடித்துத் தந்தைதாயரை விலக்குதல் தக்கதா? அல்லது தந்தைதாயரை யேற்றுக் கொள்ளு முகமாகத் தன்கொள்கையை விட்டு அநுமானத்தை யேற்றுக்கொள்ளல் தக்கதா? அன்பர்களே! சிந்தித்துப் பார்மின்கள். இங்ஙனங் காட்சி யனுமானங்களை யேற்றுக் கொள்ளுங்கால் இவற்றை விளக்குதற்குரிய உரையளவையை எங்ஙனம் விலக்க முடியும்?

உரையளவையாகிய நூற் பிரமாணங் கொண்டே மக்கள் தம் அறிவைப் பெருக்கிப் பற்பல நுண்ணிய அரிய பொருள்களை யெல்லாம் அறிகின்புறற் பாலர். ஆகவே நூலளவையையும், கருதலளவையையும் ஏற்றுக் கொண்டே எப்பொருளையும் அறிவுடையார் ஆராய்தல் வேண்டும். 'இந்நியாய நெறியில் யாம் செல்லேம்; எம்முளஞ் சென்றவாறே செல்வேம்' என்று வரம்பிகந்து பேசுவார்க்கு யாம் தரும் மாற்றம் யாதுளது? "நிற்பார் நிற்க நில்லா வுலகி னில்லோ மினிநாம் செல்வோமே" என்னும் அருண்மொழிப்படி அவரவ்வளவின் மகிழ்க என்றமைந்து "நெறியி னீங்கியோர் நீரல கூறின், அறியாமையென் றறியல் வேண்டும்" என்பதைக் கடைப்பிடித்து இறைவனை நோக்கி, "கடவுளே! நன்னெறி யிகந்து இருளதர் செல்லும் சோதரர்க்கு நீக்கரு நிலையி னிற்கும் நீ அறிவு விளக்கை யளித்துக் காத்தருளல் வேண்டும்" என்று வேண்டுதலே யன்றி வேறென் செயக் கடவேம்! நம் சமய அடையாளங்களாகிய திருநீறு கண்டிகை யணிதலும், ஆலய வழிபாடு செய்தலும், உண்மைப் பத்தியை விளைவிக்கும் புராணக் கதைகளைக் கேட்டலும் இன்றியமையாதனவாக, இவற்றை யெல்லாம் பயனற்ற செயலெனக் கூறித்திரியும் சிறுநெறியாளர் கொடுமதியை யென்னென் பேன்! என்னென்பேன்!!

புராணக் கதைகள் அவை தோன்றிய காலத்து மக்கள் ஒழுகலாறு நோக்கி யெழுந்தன வாதலின் அவற்றுட் சில இற்றைநாள் மக்கள் நாகரிகத்துக்கு ஒவ்வாதனவாகவு மிருத்தல் கூடும். அங்ஙனம் இயையாதன இன்னவென்று தெளிந்தால் அவற்றை விட்டுக் கொள்வன கொள்ளுத லன்றோ முறை! எல்லாம் பொய்யெனக் கூறுதல் எப்பிரமாணம் பற்றி? புராண காவியங்கள் நிகழ்ந்தனவும், நிகழாதனவும், இரண்டுங் கலந்தனவும் எனப் பலதிறப்படும்,

நிகழாதனவற்றிலும் நீதி அறம் கடவுட் பக்தி முதலிய நலமிருப்பின் ஏற்றுக்கொள்ளலாம். நிகழ்ந்தனவற்றிலு மக்களுக்குத் தீங்கு விளைப்பன வுளவேல் அவற்றை யறிந்து ஒதுக்கி விடலாம். பொய் மெய்களின் உண்மையிலக்கணத்தை யறிந்தார் இம்முறையைக் கோடல் ஒருதலை. "வாய்மையெனப்படுவதி யாதெனின் யாதொன்றுந், தீமை யிலாத சொலல்" எனவும், "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்குமெனின்" எனவும் போந்த பொய்யில் புலவர் பொருண் மொழிகள் எத்துணை ஆழ்ந்த சிந்தனையின்மேல் வெளிப்பட்டன. உற்று நோக்குமின்கள்! நிகழாதது பற்றிப் பொய்யெனவும், நிகழ்ந்தது பற்றி வாய்மை யெனவும் கொள்ளப்படவில்லை. தீமை பயத்தல் நன்மை பயத்தல்களையே பொய்ம்மைவாய்மைகளுக்குப் பொருளாகக் கொண்ட சிறப்பு, நம் முன்னையோர் பெருமையைப் புலப்படுத்துகின்றது.

வடமொழி யியைபை அறவே தொலைத்துவிட வேண்டு மென்னும் கொள்கையும் நம் சமயப் பாதுகாப்புக்கு ஊறு செய்வதாகும். அம்மொழிக்கணுள்ள வேதாகம புராணேதிகாசங்களுள் நம் சமய வுண்மைகளை விளக்கும் பகுதிகள் நமக்குப் பிரமாணங்களென்றே நம் பெரியார் கொண்டு போற்றினர். வடமொழிக்கண் உள்ள நூற் பரப்புக்கள் அறிவுடை யுலகத்தாற் பாராட்டப் படுகின்றன. ஒரு சிலர் அம்மொழியைத் தமக்கே யுரியதென அறியாமையாற் கொண்டு நம்மை வெறுப்பாராயின், அவரை வெறுத் தொதுக்குதலே முறையாகுமன்றி அவர் புரியுந் தீங்கு குறித்து அம்மொழிக்கணுள்ள சுவை நிரம்பிய காவியப் பகுதிகளையும் அறிவு நூற் பகுதிகளையும் அறிந்து இன் புறும் பேற்றை யாமேன் இழக்க வேண்டும்? உண்மைப் பொருள் எம்மொழிக்க ணிருப்பினும் அறிவுடையார் கொள்ள விரும்புதலியல்பே. நம் செந்தமிழறிவு நூல்களெல்லாம் வடமொழிக் குறியீடுகளையே பெரிதுந்தழீஇ நிற்கின்றன. அவற்றைப் பொருட் பிறழ்ச்சி நேராமல் தமிழ்மொழியில் ஆக்கிக்கோடல் நன்றாயினும் அதுபற்றி வடமொழியை வெறுத்தொதுக்க வேண்டுமென்பதில்லையே! தமிழிலுள்ள தலபுராணங்களிற் பல அம்மொழி பெயர்ப்பாயினும் சிறந்த காவியமுறையில் அமைந்தனவாகும். வடமொழியிற் புராண நடை வேறு; காவிய நடை வேறு. தமிழிலுள்ள தலபுராணங்கள் பெரும்பாலும் காப்பியச் சுவை நலங்களிற் தொழுகும் முறையிலமைந்தனவே.

நிகழாத வரலாறுகளைப் பற்றியெழுந்தனவற்றையும் கவிச்சுவை, அறநிலை முதலிய நலநோக்கி ஏன் அவற்றைப் படித்தலாகாது? அம்முறையில் அவைகளும் பயன் விளைவிப்பனவேயாம். கவியின் கற்பனாலங்காரங்கருதிக் கூறப்பட்டவைகளைப் பொய்யெனக் கூறி யிகழ்தல் நூல் நலம்பெற விழையும் மதிபடைத்தார்க்குப் பொருந்துவதன்றாம். எவற்றினும் நல்லன விரும்பிற் கொள்ளல் வேண்டும். காலத்தான் முற்பட்டது பற்றிக் கோடலும் பிற்பட்டதுபற்றி விலக்குதலும் முறையன்று. நன்று தீதாய்ந்து நல்லன கொள்ளுதலே அறிவுடையார் கடமை. "தொன்மையவா மெனுமெவையு நன்றாகாவின்று தோன்றிய நூலெனுமெவையுந் தீதாகா" என்பது உமாபதியாசிரியர் உயர் மொழியாகும்.

## வேண்டுகோள்

சைவ சீலர்களே! உண்மைகளைப் பிறழ்வித்து உறுதிப்பயன்களைக் கெடுக்க வெழுந்த சுழற்காற்றுக் கஞ்சாதீர்கள். "வானந் துளங்கிலென் மண் கம்பமாகிலென்........ஒருவனுக் காட்பட்டவுத் தமர்க்கே" என்னும் நம் அப்ப ரருண்மொழியைக் கடைப்பிடித்துச் சமயநிலையிற் கொண்ட உறுதியைத் தவறவிடாதீர்கள். யாண்டும்



சைவ சித்தாந்த உண்மைகளைப் பரப்புமின்கள். சித்தாந்த நூல்களை நம் இளைஞர்கள் செவ்வனம் படித்தறிதற்கேற்ற நிலையங்களை நிலைப் படுத்துமின்கள். தமிழிலுள்ள சைவ சித்தாந்த நூல்களும் அவற்றினுரைகளும் கவிச்சுவை நிரம்பியுள்ளன வாதலின் அவற்றை அம் முறையிற் படிப்பித்தல் நன்று. தேவார திருவாசக முதலிய திருமுறை இலக்கியங்களைப் பொருளாராய்ச்சியுடன் தெளிவு பெறக் கற்பிக்கும் அற நிலையங்கள் வேண்டும். இக்காலத் திளைஞர்கள் கல்விப் பயிற்சி செய்தற்கு முன்னரே 'எங்கொள்கை ஈது நங்கொள்கை ஈது' எனத் தெளிவு கைவரப் பெறாமல், அடிப்படையிலேயே கொள்கைபற்றித் தடுமாறுகின்றனர். அன்னார் சற்றுப் பொறுமையுடன் முறையாகக் கற்றுச் சமய நூற்போதம் பெறுவாராயின், உண்மை தெளிந்து பிற்கால உலகுக்கு மிகவும் பயன் படுவர். ஆதலின் அவர்களை அறிவு நூற் பயிற்சி யுடையராக்கி நன்னெறிப் படுத்த முயலவேண்டும்.

சமய நூலாராய்ச்சி சமய ஒழுக்கத்தோடு செயற்பாலதாகும். நூலறிவும் ஒழுக்கமும் ஒருங்கியைந்தே வளர்ச்சியடையும்படி தக்க சாதனங்களைச் சைவ சீலர்களாகியசெல்வர்கள் செய்ய முந்தவேண்டும். செல்வம் படைத்தார் இச்சிறந்த அறிவறத்தை யன்றி வேறென் செயக்கடவர்! கால நிலையோ விபரீதமாக மாற்ற மடைந்து வருகின்றது. இவ்வமயம் அறிவுந் திருவும் வாய்க்கப் பெற்றோரும் அறிவுச் செல்வ மாத்திரமுடையாருமாகிய சைவ சீலர்கள் மன மொழி மெய்களாலும் மற்றைப் பொருள் முதலிய உபகாரணங்களாலும் செல்லும் வாயெல்லாம் ஒல்லும் வகையான் சிவநெறி பேணுஞ் செவ்விய அறங்களைத் தாழாது புரிய முன் வரல் வேண்டும்.

இன்னோரன்ன சைவமகாசங்கங்களைத் தமிழ் நாடெங்கணும் நிலைபெறச் செய்து அறிவொழுக்கங்களிற் சிறந்த பெரியாரைக் கொண்டு சமயவுண்மைகளை யாவரும் உளங்கொள வெளிப்படுத்தல் வேண்டும். சைவமடாதிபதிகளை யடுத்து அன்னார் கடமைகளைக் காலநோக்கித் தாழாது புரியும்படி வேண்டிக் கொள்ள வேண்டும். அன்னாரயர்வு காட்டினும், அவர்களை வெறாது, அவர்தம் உளங்கொளவேண்டுவன வெடுத்துரைத்துச் சைவப்பயிர் தழைய அன்னாருண் மழையைப்பெய்விக்கவேண்டும். இன்னோரன்ன உண்மை முயற்சிகளில் நாம் தலைப்பட்டுத் திருவருட்டுணை கொண்டு சைவநலம் பேண முற்படுவேமாயின் வேண்டுவார் வேண்டுவன ஈயும் பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் நம் முயற்சியைப் பயனுறச் செய்து நமது சமயவாழ்க்கையைப் புனிதமுறத்தந்து இன்புறுத்திக் காத்தருள்வாரென்பதொருதலை.

பெரியோர்களே!

"கூறுமி னீசனைச் செய்மின்
குற்றேவல் குளிர் மின்கண்கள்
தேறுமின் சித்தந் தெளிமின்
சிவனைச் செறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை யறுமின்
அவலமிவை நெறியா
வேறுமின் வானத் திருமின்
விருந்தா யிமை யவர்க்கே"

என்னும் பெரியார் அருளுபதேசத்தை எடுத்துக் காட்டி இம்மட்டில் அமைகின்றேன்.

சிவநெறிச் செல்வர்களே! இத்துணைக்காலம் என்சிற்றுரைக்குச் செவிதந்து பொறுமை மேற்கொண்டிருந்த உங்களுக்கு என்உளம் இயைந்தவணக்கம் உரியதாகுக.

சைவத்திறமுந் தெய்வத்தமிழும் தழைத்தினிது ஓங்குக.

திருச்சிற்றம்பலம்.

# சைவ சித்தாந்த மகா சமாஜம்

## இருபத்தைந்தாம் ஆண்டுவிழா

[வ. மு. இரத்திநேசுவரையர்]

சைவ சித்தாந்தப் பெருநெறியையும் செந் தமிழையும் சீர்பெற ஓம்பிவரும் சைவசித்தாந்த மகாசமாஜத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு விழாவானது, திருமலி சென்னைப் பெருமாநகரில் - பச்சையப்பன் மகா மண்டபத்தில், 25, 26, 27—12—30 தேதிகளில், பாண்டி நாட்டு மகிபாலன்பட்டிச் சைவத் திருவாளர் - பண்டிதமணி - மு. கதிரேசச் செட்டியாரவர்களின் தலைமையில் மிக்க விமரிசையாக நடைபெற்றது.

தலைவரவர்களைச் சமாஜ அங்கத்தவர்கள் எழும்பூர் புகைரத நிலையத்தில் 24-12-30 தேதி காலையில் வரவேற்று மாலை சூட்டி அழைத்து வந்து, கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் 150-ம் எண்ணுள்ள சமாஜக் காரியாலயத்தில் அமரச் செய்தார்கள். அன்று மாலை அவ்வில்லத்தில் சமாஜத்தின் நிர்வாக சபையினரையும் சொற்பொழிவாளர்களையும் சென்னையிலுள்ள தமிழறிஞர்களையும் சைவத் தொண்டர்களையும் தலைவரவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காகச் சமாஜக் காரியதரிசி திருவாளர் ம. பாலசுப்ரமண்ய முதலியார், B. A. B. L. அவர்களால் ஒரு சிறந்த விருந்து அளிக்கப்பட்டது. அதன் பின்னர் திரு. வைத்தியலிங்க ஓதுவார் மூர்த்திகளால் தமிழ்மறை ஓதலும், திரு. வி. சே. ஆறுமுக முதலியார் அவர்களால் நாயன்மார் சரித்திரப் படக் காட்சியும் நடைபெற்றன.

25-12-30 அன்று ஆண்டு விழாவின் முதல் நாளில் 12 மணி முதல் மாலை 3 மணி வரை ஸ்ரீமதி R. S. சுப்புலக்ஷ்மி அம்மாள் B. A. L. T. அவர்கள் தலைமையில் சைவ மங்கையர் மாட்சி காட்டும் தனிக்கூட்டம் நடைபெற்றது. இதன் நிகழ்ச்சிகளை மற்றோரிடத்திற் காண்க.

அதன் பின் 3 மணிக்கு ஆண்டு விழா மகாநாட்டுத் தலைவர் சைவத் திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களைச் சமாஜ நிலையத்தினின்று மங்கள வாத்திய மொலிப்ப, மாலை அணிவித்துச் சைவப் பெரியாரும் சொற்பொழிவாளரும் சூழ்ந்துவர அணிவீதி வழியாகப் பணிபல துலங்கும் பச்சையப்பன் மகா மண்டபத்திற்கு அழைத்து வந்தார்கள். சைவத் திருவாளர் வைத்தியலிங்க ஓதுவார் மூர்த்திகள் கேட்டற் கினிய இசையுடன் தமிழ் மறை ஓதியதும், சமாஜ உதவித் தலைவர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை M. E. S. அவர்கள் பண்டிதமணி அவர்களைப் பல நல்லுரையால் அவைக்கண் குழுமிய பெருங் கூட்டத்திற்கு அறிவுறுத்தித் தலைமைவகிக்க வேண்டிக் கொண்டார்கள். அதனைப் பலர் அநுமதித்துக் கரகோஷஞ் செய்தனர். தலைவர் வரவேற்புச் செய்யுட்களைப் பண்டித ரத்தினம் குகஸ்ரீ புழலை திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் யாத்துப் படித்து நல்கினார்கள். மகா சமாஜத்தின் ஆண்டு அறிக்கைப் பத்திரத்தைத் திருவாளர் ம. பாலசுப்ரமண்ய முதலியார் அவர்கள் படித்தார்கள். (இதனை மற்றோரிடத்திற் காண்க.) தலைவர் அவர்கள் தலைமைப் பேருரை ஒரு மணிநேரம் வரையில் சூழ்ந்த பொருட் செறிவுடைய இனிய மொழித் தொடர்களால் யாக்கப் பெற்றுச் சபையார்க்கு மகிழ்வுப் பெருவிருந்தாக மிளிர்ந்தது, (இதனை மற்றோரிடத்திற் காண்க.) அதில் சைவ சித்தாந்தப் பெருமையையும், இக்காலச் சைவ சமய நிலையையும், பெரும் பொருளாகிய கடவுளின் உண்மையையும், ஆண்டானடிமைத் திறத்தையும், உயிர்கள் உண்மை முத்தி கூடும் வகையையும் மிகத் தெளிவாகவும் இனிமையாகவும் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இடை யிடையே பெரிய புராணம் தேவார திருவாசகம் முதலிய தமிழ்ப் பெரு நூல்களிலிருந்து பற்பல நுண்பொருள்களைப் பேரறிவாளர் மிகக் களிகூறும்வண்ணம் நுவந்தபெருமை பாராட்டப் பெற்றது. வடமொழியிலிருந்தும் சிற்சில அருமைப்பொருள்களை விளக்கினார்கள். தலைவரவர்கள் பேருரை மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையார் வெளியீடாக அச்சியற்றப்பெற்று யாவருக்கும் வழங்கப்பட்டது. பின்னர் "சித்தாந்தம்" உதவிப்பத்திராசிரியரும் திருக்குறள் விளக்கப்பதிப்பாசிரியருமாகிய திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் "திருச்சிற்றம்பலக்கோவை" என்னும் விஷயத்தை இனிமையாகவும் காட்சி முதலிய துறைவகைகளை விளக்கமாகவும் கோவையாரில் உள்ள



இயல் அமைப்பைத் திறம்படவும் பேசினார்கள்.

சென்னை இந்து அறநிலைப் பாதுகாப்பாளர் திரு. T. K. சிதம்பரநாத முதலியாரவர்கள், B. A. B. L. "சைவந் துலங்குந் தமிழ்" என்பதைப்பற்றித் தமிழ்ப் பெருமையும்சைவத்திற்கும் அதற்குமுள்ளதொடர்பையும் நன்கு விளங்க "பூமேலயனறியா மோலிப் புறத்ததே" என்னும் செய்யுளைப் பீடிகையாகக் கொண்டு விரித்துப் பேசினர். திரு. காவித்தண்டலம் வேதாசல முதலியாரவர்கள் "பஞ்சாக்ஷரம்" என்னும் பொருள்பற்றித் நூலநுக்கும காரண வகைகளையும் தமிழ் வேதம் முதலியவற்றில் அது வருமாற்றையும் உபதேச முறைப்படி ஜெபம் செய்ய வேண்டிய தலைமைப்பாட்டையும் புகன்றார்கள். தலைவரவர்கள் கருத்துரையில் ஒவ்வொரு பிரசங்கத்தைப் பற்றியும் நயம்பட உரைத்தார்கள்.

முதல் நாள் நிகழ்ச்சி தமிழ்வேத ஒலியுடன் நிறைவெய்தியது.

இரண்டாம் நாட் காலை சைவ இளைஞர் தனிக்கூட்டம் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A. L.T. M. E S. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதன் நிகழ்ச்சிகளை மற்றோரிடத்திற் காண்க.

பிற்பகல் பண்டிதமணி திருவாளர். மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமை வகிக்க, தமிழ்மறை ஓதியபின் சமாஜக் கூட்டம் ஆரம்பமாயிற்று. தேவகோட்டை சிவகங்கை S. M. S. கலாசாலைத் தமிழாசிரியர் திரு. வ. மு. இரத்தினேசுவரையர் அவர்கள் "கடவுளருள்" என்பது பொருளாக, உலகுக்கு முதல்வர் ஒருவர் வேண்டுமென்றும் அவர் சிவபெருமானே என்றும், சமயநிலையும், சமயப்பற்றும் வேண்டுமென்றும் விளக்கினார்கள். சமாஜ உதவிக் காரியதரிசி திரு. பா. கந்தநரசிம்ஹம், B. A. B. L. வழக்கறிஞர் அவர்கள் "அடிமை சால அழகுடைத்தே" என்பதைப் பொருளாகக் கொண்டு ஆண்டவனுக்கு உண்மை அடிமை பூண்டு வாழ்வதின் இம்மை மறுமைப் பலன்கள் யாவை என்றும், மணிவாசகப் பெருமான் அடிமைத் திறத்தைப்பற்றித் திருவாசகத்தில் அருளியதை எடுத்துக்காட்டியும் பேசினார்கள். திருவாளர் E. N. தணிகாசல முதலியார், B. A. B. L. அவர்கள் "மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்" என்னும் திருப்பாசுரத் தொடரை விளக்கி, இம்மை மறுமைகளில் நமக்கு உற்றதுணையானவர் கடவுளே என்று இசைத்தார்கள். சென்னை இந்து அறநிலைப் பாதுகாப்புக் காரியதரிசி திரு. C. S. சுவாமிநாத முதலியாரவர்கள், B. A., "இயேசு கிறிஸ்துவின் சரிதத்திலுள்ள சில அரும்பொருள்கள்"— என்னும் பொருள் பற்றி, விவிலிய நூலில் இயேசு கிறிஸ்து கூறிய நன்னீதி மொழிகளைக் காட்டி, நற்பொருள்களைச் சைவர்களும் பாராட்ட வேண்டுமென்பது நுதலச் சொற்பெருக்கிட்டார்கள். ஸ்ரீமதி E. T. இராஜேசுவரி அம்மாள், B.A. அவர்கள் 'திருவாசக இருதயப் பாசுரம்" என்பதைத் தலைப்பாகக்கொண்டு, "இன்றெனக்கருளி இருள் கடிந்து உள்ளத்தெழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின்தன்மை" என்ற திருவாசகப் பாட்டின் நுண்பொருள்களை, பூதத்துவ சாத்திர உண்மைகளைச் சேர்த்து விளக்கினார்கள். உயர் திரு. தலைவரவர்கள் "திருவாசகத்தேன்" என்று தொடங்கி, சருக்கரைக் குன்றில் தேன் மழைச் சொரிய இன்னருவி பெருக்கெடுத்தோடியதாங்கு, திருவாசகச் செஞ்சொற் பொருளையும் பெரிய புராணத்தில் வரும் அரும்பொருள் ஒற்றுமையையும் விளக்கி நீண்ட நேரம் அவையோரனைவரையும் ஆனந்தத்தில் திளைக்கச் செய்தனர். பின்னர் சொற்பொழிவாளர்களின் பிரசங்க விஷயங்களை ஆதரித்துப்பேசி முடித்தனர். தமிழ் மறை ஓத சபை நிறைவெய்தியது.

மூன்றும் நாள் 27-12-30 அன்று 12 மணிக்குமேல் சமாஜக் காரியக்கூட்டம் நடைபெற்றது. உத்தியோகஸ்தர் நியமனம் நடைபெற்றது. இதன் முடிபு அடுத்த இதழில் வெளிவரும். காரியதரிசி திரு. ம. பாலசுப்ரமண்ய முதலியார் அவர்கள் "சைவசித்தாந்த மகா சமாஜத்தோடு இணைக்கப் பெறாத சைவ சபைகளில் சொற்பொழிவாற்றவோ, தலைமை வகிக்கவோ சமாஜநிர்வாகப் பொறுப் பேற்றவர்களில் எவர்களும் மகா சமாஜ வளர்ச்சி கருதி இணங்கலாகாதென்று இம் மகாநாடு வற்புறுத்துகின்றது" என ஒரு தீர்மானம்கொண்டு வந்தார்கள்.

இதனைத் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் ஆதரித்தார்கள். திரு. T. V. உலகநாத முதலியார் அவர்கள் அதை எதிர்த்துப் பேசினர். பிறகு காரியதரிசி விடை கூறினார்கள். பின்பு ஏகமனதாக அத்தீர்மானம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

திருமயிலைச் சிவாலய ஸ்தானீகர் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியரவர்கள் "நடராஜ தத்துவம்" என்பதை வடமொழி உதாரணத்துடன் விளக்கி உபந்நியாசம் செய்தார்கள். பின்னர் லேடி வில்லிங்டன் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதை ஸ்ரீமதி கிருஷ்ணவேணி

அம்மாள் அவர்கள் "பெண்களின் மனநிலை" என்பது பொருளாக இனிமை தோன்றப் பேசினர். அவர்கள், கடவுளும் சிவம் சத்தி என்று அழைக்கப் பெறுகிறார் என்றும் உலக இயலில் பெண்களேமுதன்மையுடையவர்கள் என்றும், பெண்களே கல்வியில் முன்னேற்ற மடைய வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள். வழக்கறிஞர் திருவாளர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, M. A. B. L. அவர்கள் "பிள்ளைப் பாட்டு" என்று தொடங்கி அரும் பொருள்களைக் காட்டிச் சில பிள்ளை பாட்டு வகைகளைக்கூட்டி இன்புறப்பேசினர். அதன்பின் "தேசபந்து" ஆசிரியர் திருவாளர் தெ. பொ. கிருஷ்ண சாமிப் பாவலரவர்கள் "ஸ்சைவம்" என்பதை மிக்க வீரத்துடன் சைவர்கள் சமயப் பற்றுடன் இருக்கவேண்டுமென்பதை வலியுறுத்திப் பேசினார்கள். "நவசக்தி" ஆசிரியர் திருவாளர் திரு.வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் "இமயமலை" என்னும் பொருளை மேற்கொண்டு, மேலை நாட்டவர் முயற்சித் திறமும், இமயமலை நமக்குக் கற்பிக்கும் கடவுள் வடிவத் தோற்றமும், மலைகளில் கடவுள் எழுந்தருளியிருக்கும் பண்பும், குமர நாயகன் மலைகளில் வைகும் மாட்சியும் விளங்க உளம் உருக நலம் பலவுடன் பேருரை புரிந்தார்கள்.

பின்னர் நெல்லூர் அரசாங்கக் கலாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் "ஈதென்ன புதுமை" என்று தொடங்கி சைவத்தை வளர்க்க ஒவ்வொரு தமிழ் மகனும் பெண்மணியும் நினைந்து முயன்று வரவேண்டு மென்றும் பண்டைச்சமய நிலையும் மற்றை நாகரிகங்களும் இக்காலத்துப் பிறழ்ந்திருத்தலை ஒவ்வொருவரும் உணரவேண்டு மென்றும் விளக்கி "ஈதென்ன புதுமை" என்னும் மகுடத்தை ஒவ்வொன்றிலும் ஒட்டி நகைச்சுவை தோன்றப் பொருட் செறிவுடன் பேசினார்கள். இவரது நவமான சொற்பொழிவின் போக்கு சபையார்க்கு மிகவும் குதூகலமளித்தது.

தலைவரவர்கள் சொற்பொழிவுப் பெருக்குகளின் பொதுநோக்கையும், பெரிய அரிய தங்கள் கருத்தையும் காட்டிப் பேசிவிட்டு, மூன்றுதினத்தும் சமாஜத்தார் அரும்பணியாற்றியதற்காக வியந்து நன்றி கூறினார்கள்.

காரியதரிசி அவர்கள் தலைவரவர்களுக்கும், சொற்பொழிவாளர்களுக்கும், சபையார்க்கும் வந்தன மளித்தார்கள். ஓதுவார் மூர்த்தி அவர்களுக்கு ஓர் உருத்திராக்கம் தங்கச் சரட்டிலிட்டுக் கழுத்தணியாக அளிக்கப்பட்டது. அவர்கள் அருட்பாசுரங்களை இடையிடையே பாடியது மிக்க இன்னமிழ்தாக இருந்தது. சபை, தமிழ் மறையும் சிவநாம ஓசையும் பொங்க, சங்கரனருளால் இங்கிதமாக மங்களத்துடன் நிறைவெய்தியது. என்றுமின்பம் பெருகுக. சோதில் சைவக் குலமிக வாழியே.

## சைவ மங்கையர் தனிக்கூட்டம்

[பண்டிதை - கிருஷ்ணவேணியம்மாள்]

சென்னை பச்சையப்பன் கலாசாலையில் தொடங்கிய சமாஜ 25-ம் ஆண்டு நிறை விழாவை யொட்டிய சைவ மங்கையர் தனிக்கூட்டம் ஒன்று (25 12-30)இல் பகல் 12 முதல் 3 மணி வரை சகோதரி R. S. சுப்பு லக்ஷ்மி யம்மாள், B. A. L. T. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சுமார் 100 பெண் மணிகள் வந்திருந்தார்கள்.

தலைவியார் தம் முன்னுரையில், சிவ சம்பந்தம் சைவம், சைவம் என்பது அன்பு எனப்பொருள்படும் ; ஆதலால் எல்லாவுயிர்களிடத்தும் அன்புடையவர்களாய் அவரவர்கட்குவேண்டிய உதவி புரிதலே சைவர்களுடைய முக்கிய கடமையாகும். ஒவ்வொருவரும் மனச்சீலமுடையவர்களாய்த் தன்னைத் தான் உயர்த்திக்கொள்ள முயற்சிக்கவேண்டும். விஷயங்களை அதிகமாய் எடுத்துப் பேசுவதில் மாத்திரம் பயனின்று, கூறியபடி நடந்து காட்டவேண்டும் என யாவருடைய மனதிலும் நன்கு பதியும்படிப் பேசி முடித்தார்கள்.

பிறகு ஸ்ரீமதி. நாராயணியம்மாள் அவர்கள் "சைவமும், பெண்கள் உரிமையும்" என்னும் தலைப்பின் கீழ், சைவசமயம் மற்றெல்லாச்சமயங்களுக்குமிடந்தந்துநிற்கின்ற சமரசசமயம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு பாராட்டுகின்ற உத்தம சமயம், இத்துணைச் சமயம் பழயகாலத்தில் மங்கையர்களாலேயே சிறப்புற்று விளங்கியது. உதாரணமாகத் திருநாவுக்கரசு நாயனரைச் சைவத் துறையிலிறங்கச் செய்ததும் பாண்டியனையும் தேசமக்களையும் சைவத்திலீடுபடுத்தியதும் முறையே திலகவதியாரும் மங்கையற்கரசியாரும் செய்த தவமே. உயிர்களிடத்துக் கருணை பாராட்டித் தற்காலதிற்குச் செய்யவேண்டிய சில இன்றியமையாத சீர்திருத்தங்கட்கு இடந்தந்து சைவத்தையும் பெண்களையும் முன்னேற்ற மடையச்செய்யவேண்டுமெனக் கூறினார்கள்.



ஸ்ரீமதி 'தனம்மாள் பெண்களின் தன்மை' என்பதை முதன்மையாகக் கொண்டு, பெண்கள் கல்விகற்று அடக்கம் பொறுமை முதலியவைகளிற் சிறந்து விளங்கவேண்டுமென மொழிந்தார்கள்.

ஸ்ரீமதி பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மாள் அவர்கள் முயற்சி என்பதை முதன்மையாகக் கொண்டு, தேக முயற்சியைவிட மனேமுயற்சிஇன்றியமையாததாகும். பழைய காலத்து நம் தமிழ்ப் பெண்மக்களில் பெரும்பாலார் முயற்சிக்கு இலக்கியமாக விளங்கினார்கள். தற்காலத்திலோ இம்முறையில் யாம் பெரிதும் பின்னடைந்திருக்கிறோம். இப்போதும் மற்றைய நாட்டுப் பெண்மணிகள் நம்மைவிட பல வேலைகளில் தேர்ச்சியுடையராய் மேலான சீர்திருத்தங்களைப் பெறமுயற்சிக்கிறார்கள். அவர்களையும் நம்மையும் ஒக்கநோக்குமிடத்து நாம் கல்வி கைத்தொழில் முதலியவைகளில் மிக்க குறைந்த நிலைமையிலிருக்கின்றோம். அங்ஙன மிருப்பதற்கு நம் முயற்சியின்மையே காரணம். நம் முன்னேற்றத்தைக் கருதி ஒரு காரியஞ்செய்யப் புகுமிடத்து நம்மனோர்களுக்குப் பகுதி வேறுபாடும் மத வேறுபாடும் வந்து அதைத்தடுத்து விடுகிறது. பெண்கள் அறிவிற்சிறந்து விளங்க வேண்டுமானல் நன்னெறியினின்று ஒரு சிறிதும் வழுவாமல் கல்வி கைத்தொழில் விஷயமாய் சில முயற்சிகளை மேற்கொள்வதே தற்காலத்துத் தேவையாகும் என மொழிந்தார்கள்.

பின்னர் தலைவியாரவர்கள் நயம்படத்தமது முடிபுரையைத் தெரிவித்தார்கள். இடையிடையே தேவார இராஜம்மாள் அவர்களால் தேவாரம் பண்ணிசையுடன் ஓதப்பட்டது. கடைசியில் தலைவியாரவர்கட்கும் உபந்நியாசகர்களுக்கும் வந்தனம் கூறப்பட்டு, சைவ மங்கையர் தனிக்கூட்டம் இனிது முடிந்தது.

## சைவ இளைஞர் தனிக்கூட்டம்

[திரு. கி. நாராயணசாமி நாயடு]

இது சமாஜ ஆண்டுவிழாவின் இரண்டாம் நாள் காலை 10 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை சைவத் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை B.A. L. T. M. E. S. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவரவர்கள் இளைஞர் மனதிற்பதியும் வண்ணம் மிகச் செம்மையாகப் பல சைவ சமய உண்மைகளையும், சமய ஒழுக்க நுட்பங்களையும், சீர்திருத்த முறைகளையும், பணி செயல்வகைகளையும் எடுத்து தமது முன்னுரையில் விளக்கினார்கள். பின்னர் "சைவ இளைஞர் இயக்கம்", "பொறை" "சொற்கோ சொல்," "வித்தகம் பேசவேண்டாம் பணி செய்யவேண்டும்," "உலகெல்லாம் சைவ மணம் திகழ்ந்தோங்கவேண்டும்," "செயல்முறை" என்பனபற்றி முறையே திருவளர் செல்வர்கள் சு. வேதாசலம், சு. சிவகுமாரன், தி. கு. கி. நாராயணசாமி, மறை திருநாவுக்கரசு, அ. முத்தையா, வே. தியாகராயன் என்ற சைவஇளைஞர்கள் அரியதங்கள் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். திருவிடைமருதூர் சைவ இளைஞர் மகாநாட்டுத் தீர்மானங்களைச் செயல்முறையில் அதிதீவிரமாகக் கொண்டுவர வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானித்தனர். தமிழ்மறை முழக்கத்தோடு இளைஞர் தனிக்கூட்டம் பகல் ஒரு மணிக்கு இனிது கலைந்தது.

---

**பிழை திருத்தம் :**—இவ்விதழ் கரு-ம் பக்கத்தில் "சுழுத்தி" எனும் பாடலின் ஐந்தாம் அடியாக "அழுத்திடு மூலந்தன்னில் துரியாதீதம்" என்று சேர்த்துக்கொள்க. "நின்ற" என்று கடு-ம் பக்கத்தில் தொடங்கும் வாக்கியத்துக்குப் பதிலாகக் கீழ்வரும் வாக்கியங்களை அமைத்துக்கொள்க:—"நின்ற என்பது நிகழ்காலப் பெயரெச்சம். முற்காலத்திலும் நின்றிருக்கும் பெருமான் தன்மையை உணர்த்தும்.

## சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை

(1929-ம் ஞு டிசம்பர்மீ 1உ முதல் 1930-ம் ஞு நவம்பர்மீ 30உ வரை)

# வரவு செலவு கணக்குத் தொகுப்பேடு

**வரவு**

| வரவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| ஆயுள் சந்தா ... | 15 | 0 | 0 |
| சித்தாந்தம் சந்தா ... | 952 | 15 | 0 |
| ,, நன்கொடை ... | 172 | 8 | 0 |
| ,, அதிக சந்தா ... | 1 | 8 | 0 |
| ,, பழைய பிரதிகள் விற்பனை ... | 38 | 7 | 0 |
| இணைத்தல் சந்தா ... | 15 | 0 | 0 |
| இதா வெளியீடு நன்கொடை. | 15 | 0 | 0 |
| தபால் வகை ... | 73 | 0 | 0 |
| சில்லரை வகை ... | 14 | 4 | 0 |
| வே. ஐ. நா. சங்கம் ... | 413 | 0 | 0 |
| வட்டி வரவு ... | 35 | 8 | 3 |
| விளம்பரம் வரவு ... | 12 | 0 | 0 |
| தேவாரம் கணக்கு ... | 2021 | 13 | 5 |
| | 3779 | 15 | 8 |
| ஆரம்ப இருப்பு | 41 | 2 | 3 |
| | 3821 | 1 | 11 |

**செலவு**

| செலவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| "சித்தாந்தம்" அச்சுக் கூலி காகிதம் உள்பட ... | 675 | 12 | 0 |
| இதா வெளியீடு ... | 7 | 4 | 0 |
| கூட்டங்கள் செலவு ... | 54 | 8 | 0 |
| புத்தகம் பேனா பாரங்கள் முதலியன ... | 33 | 1 | 0 |
| தபால் வகை ... ... | 265 | 5 | 9 |
| சில்லரை வகை ... | 60 | 2 | 3 |
| வே. ஐ. நா. சங்கம் ... | 1037 | 9 | 0 |
| தேவாரம் ... ... | 1677 | 12 | 11 |
| | 3811 | 6 | 11 |
| முடிவு இருப்பு | 9 | 11 | 0 |
| | 3821 | 1 | 11 |

31
RB...

**பொருள் வலிவு**

| பொருள் வலிவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| வே. ஐ. நா. சங்கம் ... | 1055 | 4 | 9 |
| தபாலாபீஸ் க்ஷேம நிதி ... | 25 | 13 | 5 |
| கை யிருப்பு ... | 9 | 11 | 0 |
| | 1090 | 13 | 2 |

வே. மாணிக்க முதலியார்,
*Annual Auditor.*
24—12—30.

187150

ம. பாலசுப்பிரமணிய முதலியார், காரியதரிசி.
தி. க. சுந்தரம் பிள்ளை, பொருட்காப்பாளர்.
க. இரத்தின முதலியார், கணித பரிசோதகர்.

## பொதுக் கூட்டங்கள்

இவ்வாண்டில் பதினேழு பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. இவைகளையன்றி, சென்னையில் சைவ மங்கையர் மகாநாடு ஒன்றும், திருவிடைமருதூரில் சைவ இளைஞர் மகாநாடு ஒன்றும், திருஇரும்பூளை யெனும் ஆலங்குடியில் கும்பாபிஷேக மகாநாடு ஒன்றும், கிழக்குமருதூரில் சமாஜ வெள்ளிவிழாவும் மிகச் செவ்வையாக நடைபெற்றன. அவைகளின் நடைமுறை விவரங்களெல்லாம் "சித்தாந்தம்" மலர் மூன்றில் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன.

## "சித்தாந்தம்" பத்திரிகை

இது நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. இதன் பத்திராசிரியருக்கும், உதவிப் பத்திராசிரியரா யிருந்து அச்சுத் தாள்களைப் பரிசோதித்து உபகரித்த திரு. கி. குப்புசாமி முதலியாரவர்கட்கும் கட்டுரைகள் வழங்கிய பேரறிஞர்கட்கும் பத்திரிகையைச் செவ்வனே அழகுடன் உரிய பொழுதில் வெளிவரச் செய்து தந்த சாது அச்சுக்கூடத்திற்கும் சமாஜத்தினர் என்றும் நன்றி பாராட்டுகின்றனர்.

## தேவார வெளியீடு

தேவாரத் திருமுறைகளைப் பல்லாயிரக் கணக்காக அச்சிட்டு வெளியிடவேண்டும் என்ற அவா நம் சமாஜத்தினருள் நெடுநாளாகக் குடிகொண்டிருந்தது 1929 ம் ஞு சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் வெளிவந்ததுபோல் இவ்வாண்டு திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் 5000 பிரதிகள் வெளியிடப்பட்டன. இவ்வெளியீட்டுக்காகத் தேவையுள்ள போதெல்லாம் வேண்டிய பொருளை முன்பணமாக உதவிய திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கட்கும், அச்சுத்தாள்களைப் பரிசோதித்தும் வேறு பல வழிகளில் பணிசெய்தும் உபகரித்த திருவாளர்கள் கி. குப்புசாமி முதலியார், திரு. வி. உலகநாத முதலியார், பாலி சு. செல்லையப்பர், அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கட்கும் இப்புத்தகங்களை மிக விரைவில் நூற்றுக்கணக்காக வாங்கி உபகரித்த தமிழ்நாட்டுச் சைவ மக்களுக்கும் நம் சமாஜத்தினரின் மறவா நன்றி என்றும் உரியதாகும்.

## நன்றி கூறுதல்

சைவ மங்கையர் மகாநாடு, சைவ இளைஞர் மகாநாடு, ஆலங்குடிக் கும்பாபிஷேக மகாநாடு, சமாஜ வெள்ளிவிழா முதலியவைகள் மிகச் செவ்வனே நடைபெறச் செய்த தமிழ்நாட்டுச் சைவசபைப் பிரதிநிதிகட்கும், காரியதரிசி, உதவிக் காரியதரிசி, கணித பரிசோதகர் முதலிய சமாஜ நிர்வாக சபையினருக்குப் பல வகையிலும் வேண்டிய போதெல்லாம் தம்மால் இயன்றவரை உழைத்துப்பேருபகாரம் செய்த பொருட்காப்பாளர் திரு. தி. க. சுந்தரம்பிள்ளை அவர்கட்கும் சமாஜத்தினர் பெரிதும் நன்றி செலுத்துகின்றனர்.

## வேண்டுகோள்

மேன்மேலும் இச்சமாஜத்தின் அரிய நோக்கங்களை ஈடேற்றுவதற்கும், சமய முன்னேற்றத்திற்குரிய சமய சீர்திருத்தம், ஆலய சீர்திருத்தம், மட சீர்திருத்தம் முதலியவைகளுக்காக செவ்வனே உழைத்தற்கும், பத்திரிகை மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கும், ஆயிரக்கணக்கான வகையில் தேவாரத் திருமுறைகளைத் தமிழ்நாடெங்கும் பரப்புவதற்கும், சைவ சமயத்தைப் பற்றிய பல நவீன அபிப்பிராயங்களை ஆராய்ந்து உண்மைச் சைவ சமயத்தை உலகெங்கும் பரப்புவதற்கும், பிரசாரகர்களை ஏற்படுத்திப் பணிசெய்வதற்கும், சைவாபிமானிகள் ஆயிரக்கணக்காக முன்வந்து பெரும்பொருள் திரட்டிச் சமாஜத்திற்கு உதவி, இச் சமாஜத்தினரை ஊக்குவித்து, சைவ சித்தாந்த சமயத்தை உலகெங்கும் உண்மையில் மிளிரச் செய்யும் திருப்பணியில் அன்பர்கள் ஈடுபடுவார்களென முழுமுதற் கடவுள் திருவடிகளை வழுத்துகின்றோம்.

"ஆதி வாழிய அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே"

இங்ஙனம் : உத்தரவின்படி.

ம. பாலசுப்ரஹ்மண்யம்,

காரியதரிசி.

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 4—No. 1.

# சமாஜ அறிக்கைகள்

1. வடலூரில் நாளது தைமீ நடைபெறும் பூச விழாவை யொட்டி நமது சமாஜத்தின் விசேஷ மகாநாடு ஒன்றை நடத்தி வைக்க, சைவத்திரு. தி. கு. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் முன் வந்துள்ளார்கள். தலைமை, நடைமுறை முதலிய விவரங்கள் பத்திரிகைகள் மூலமாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் வெளியிடப்படும்.

2. சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்பாளர் (Commissioner for Hindu Religious Endowments) சைவத் திருவாளர் T. K. சிதம்பரநாத முதலியார், பி.எ., பி.எல். அவர்கள் நுண்மை பயில் கழகம் (Study Circle) ஒன்றை மாதத்துக் கிருமுறை முதன்மையாக விருந்து நடத்தி வைக்க அன்புடன் ஒப்புக் கொண்டுள்ளார்கள். முதன் முதலாக "திருவாசகம்" முறையாகப் பயில்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும். சமாஜக் காரியாலயத்திலேயே இக்கழகக் கூட்டங்கள் நடைபெறும். இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் உடனே காரியதரிசிக்குத் தெரிவிக்கவும்.

3. சமாஜத்தின் இருபத்தைந்தாம் ஆண்டு விழாவில் நிகழ்ந்த தலைமைப் பேருரையில், ஆயிரம் பிரதிகளை நமது பத்திரிகைக்கும், ஆயிரம் பிரதிகளை ஆண்டுவிழாப் பேரவையினர்க்கும், மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையினர் அச்சிட்டு உதவிய நன்மையைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

4. சமாஜத்தலைவர் சைவத்திரு. பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் "திருவாசகத்தில் ஆயிரம் மணிவாசகங்கள்" (1000 Jems in Tiruvachakam) என்று முறையாகத் தொகுத்து நமது "சித்தாந்தம்" பத்திரிகையில் அடுத்த மாத முதல் வெளியிட அன்புடன் ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

5. "சித்தாந்த பானு" என்று பேரறிஞர்களால் போற்றப் பட்டவரும், ஆறுமுக நாவலர் சீடருள் ஒருவருமாகிய காலஞ் சென்ற மகாவித்வான் - மயிலை. தணிகாசல முதலியார் அவர்கள் அருமையாகத் தொகுத்து வைத்துள்ள பல அரிய பொருள்கள் கையெழுத்துப் பிரதிகளாக எம்மிடம் உள்ளன. அவை முறையாக "சித்தாந்தம்" பத்திரிகையில் இனி வெளிவரும்.

சைவசித்தாந்த மகாசமாஜம்,<br>
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,<br>
ஜார்ஜ் டவுன், சென்னை.

இங்ஙனம் :<br>
ம. பாலசுப்பிரமணிய முதலியார்,<br>
10-1-1931. காரியதரிசி.

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.